பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 12 புதன்கிழமை (28.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே



## முதலமைச்சரின் உறுதிமொழியை அடுத்து
## தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் துரித விடுதலை குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் துரித நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்து அனுராதபுரம் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்ட அரசியல் கைதிகள் தமது போராட்டத்தினை நேற்றைய தினத்தில் இருந்து கைவிட்டுள்ளனர்.

தமது விடுதலையை வலியுறுத்தி 2 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 21 பேர் கடந்த 21 ஆம் திகதியில் இருந்து சாகும் வரையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## 1500 ஏக்கர் காணி இவ் வருடம் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பகுதியில் இந்த வருடம் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில நடைபெற்றது. அதில் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடும்

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களை துரத்தியடிப்போம்
### எச்சரிக்கிறது பொது பல சேனா

(கிருலப்பனை)

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சிங்களவர்களுக்கு எதிரான போக்கை தொடர்ந்தும் கடைப்பிடித்தால் தமிழர்கள் அனைவரையும் தமிழ் நாட்டிற்கு துரத்தியடிப்போம் என்று பொது பல சேனா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....



# இராணுவ முகாம் அருகே மக்களின் மீள்குடியேற்றம்
## வலி.வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் தகவல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மேலும் 725 ஏக்கர் காணி மிக விரைவில் பாதுகாப்பு படையினரால் விடுவிக்கப்படவுள்ள நிலையில் அதில் ஆயிரத்து 500 குடும்பங்களை மீள்குடியேற்ற முடியும் என தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், விடுவிக்கப்படும் பகுதிகளில் பாரிய இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது எனவும் அவற்றை அண்டிய பகுதிகளிலேயே மக்கள் குடியேற முடியும் எனவும் தகவல் தெரிவித்துள்ளார். 23ஆம் பக்

## நெஞ்சார்ந்த நன்றிகள்
### 'எழுக தமிழ்' பேரெழுச்சி குறித்து தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை கண்டித்தும் தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டும் முகமாகவும் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற "எழுக தமிழ்" மக்கள் எழுச்சி பேரணியானது தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் முன்னின்று ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணியில் மதகுருமார்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டு தமது உரிமைக கோஷங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் மேற்படி பேரணியில் பங்கேற்ற அனைத்து தரப்பினருக்கும் தமிழ் மக்கள் பேரவை தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

## நிதியமைச்சர் உள்ளிட்ட 14 பேருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர், சுங்கத்திணைக்கள பொதுப் பணிப்பாளர் மற்றும் ஏனைய 11 பேரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் இந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின் போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட வரிச்சலுகை தொடர்பிலேயே இவர்களுக்கு எதிராக நேற்று மனு தாக்கல் செய்ய ப்பட்டுள்ளது.

சிங்கலே தேசிய முன்னணி உட்பட 8 கட்சிகள் இந்த மனுவை நேற்றுதாக்கல் செய்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு 6 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

### கொழும்பில் 11 பேர் கடத்தல்
## சந்தேக நபர்களை ஆஜர்படுத்த நீதிமன்று 3 மாதகால அவகாசம்

(கொழும்பு)

கொழும்பின் கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட ஐந்து மாணவர்கள் உட்பட 11 பேரது வழக்கில் முக்கிய சந்தேக நபர்களை அடையாளம் கண்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மூன்றுமாத கால அவகாசத்தை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நீதிமன்றம் வழங்கியுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே நீதிமன்றம் நேற்றைய தினம் 3 மாத கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

தலைநகர் கொழும்பின் கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் வைத்து கடத்தப்பட்டு கொழும்பு மற்றும் திருகோணமலை

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்
## ரூ.2,997 மில்.மதிப்பீட்டிலான 281 திட்டங்களுக்கு அனுமதி



24ஆம் பக்கம் பார்க்க....

## எட்கா அழுத்தம் இந்தியா தராது!

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எட்கா உடன்படிக்கையானது இரண்டு நாடுகளும் இணக்கப்பாட்டுடன் முன்னெடுக்கும்

23ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொட்டடி பகுதியில நேற்று செவ்வாய்க்கிழமை மின்சாரம் தாக்கியதில் ஒரு பிள்ளையின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த கனகரத்தினம் பாபு (வயது 38) என்பவரே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வீட்டு நீர் இறைக்கும் மோட்டாருக்கு திருத்த வேலை செய்துகொண்டிருந்த போது மின் கடத்தி மூலமாக மோட்டாருக்கு மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்துள்ளது. இதனை அறிந்திராத அந் நபர் தொடர்ந்தும் வேலை செய்து கொண்டிருந்துள்ளார்.

உடலில் மின்சாரம் பாய்ந்ததில் அவர் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்க-இந்திய ஊடுருவல்களால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்
### பொருளாதார ஒப்பந்தம் ஆபத்து என்கிறார்-பீரிஸ்



(பத்தரமுல்லை)

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தின் மீதான அமெரிக்க மற்றும் இந்திய ஊடுருவல்கள் காரணமாக பாதுகாப்பு உள்ளிட்ட அரசின் உள்ளக இரகசியங்கள் அம்பலமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் தேசிய பாதுகாப்பை மிகவும் மோசமான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தத்தை அரசாங்கம் மக்கள் ஆணையை மீறி கொண்டு வரப்பட்டால் பாரிய சவால்களையே

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை கடற்படைத்தளபதியுடன் நிஷா பிஷ்வால் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல ரவீந்திர விஜேகுணவர்தனவை சந்தித்துள்ளார்.

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் டிசியிலுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவிற்கு சென்றுள்ள இலங்கை கடற்படைத்தளபதி வைஸ அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன. நிஷா பிஸ்[illegible]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கைதான நபருக்கு 3 மாத சிறை

யாழில் கஞ்சா பொதியுடன் பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட குருநகர் பகுதி இளைஞனுக்கு மூன்று மாத கால சிறைத் தண்டனையை விதித்து யாழ்.நீதவான் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த இளைஞன் கடந்த மூன்று மாத ங்களுக்கு முன் குருநகர் பகுதியில் 300 கிராம் கஞ்சா பொதியுடன்,யாழ் பொலிஸ் நிலைய பெருங்குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்த வேளை நேற்றைய தினம் மீண்டும் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த இளைஞனுக்கு மூன்று மாத கால சிறைத்தண்டனை வழங்கி யாழ் நீதிவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ் கரன் தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை யாழ் குருநகர் பகுதியில் வீதிகளில் நிற்பவர்கள் பொலிஸாரால் கடந்த சில தினங் களாக தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# மகிந்தவின் சவால்களை முறியடித்து கட்சியை பலப்படுத்த மைத்திரி அணி திட்டம்



(கொழும்பு)

மகிந்த அணியின் சவால்களை முறியடி த்து கட்சியைப் பலப்படுத்துவதற்காக புதுத் திட்டம் வகுக்கும் பணியில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக இறங்கியு ள்ளது.

சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பலமாக கட்டி யெழுப்புவதற்காக குழுவொன்று அமைக்க ப்பட்டுள்ளது.

இதற்காக சுதந்திரக் கட்சியுடன் இணைய விரும்பும் சிறுகட்சிகளுடன் ஏற்கெனவே பேச்சுகள் நடத்தப்பட்டு இணக்கப்பாடும் எட் டப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, அவற்றை ஒருங்கி ணைப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேற்படி குழு நியமிக் கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, சுதந்திரக் கட்சி இரண்டுபட்டால் பிளவுபட்டிருக்கும் இரு அணிகளாலும் ஒருபோதும் வெற்றிபெற முடி யாது.

இது மகிந்தவுக்கும் தெரியும். ஆனால், அவர் என்ன செய்கின்றார் எனப் புரியவி ல்லை. கட்சியுடன் இருப்பார் என எதிர்பார்த் தோம். ஆனால், புதுக்கட்சிக்குரிய வேலையை ஆரம்பித்துவிட்டார்.

எனவே, அந்தக் கூட்டணியால் சுதந்திரக் கட்சிக்கு எழும் சவால் களை முறியடிப்பதற் குரிய திட்டங்களை வகுத்து வருகின்றோம் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகிந்த அணியையும், மைத்திரி தரப்பையும் இணைப்பதற்கு சுதந் திரக்கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் முன்னெடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி கண்டுள்ளன.

எனவே, இவ்விரு தரப்புகளுக்குமிடையில எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கடும் போட்டி நிலவக்கூடிய சூழ்நிலை காண ப்படுகின்றது. (செ)

## வாகன விபத்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

நேருக்கு நேர் இரு மோட்டார் சைக்கிள் கள் மோதியதில் இளைஞன் ஒருவர் படு காய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியள வில் நல்லூர் பின் வீதியில் இடம்பெற்று ள்ளது.

இதில் பண்டத்தரிப்பு விளானைச் சேர்ந்த மதியழகன் சோபிராஜ் (வயது24) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலி ஸாரிடம் முறைப்பாடு பதியப்பட்டுள்ளதன் பின் விசாரணைகள் இடம்பெற்று வருகின் றது. (செ-30)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
சத்தியபிரியா கோடீஸ்வரன் (BA)
கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கண்டி பேராதனைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற செல்வி சத்தியபிரியா கோடீஸ்வரன் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
Congratulations!
வாழ்த்துவோர்
சக வகுப்பு நண்பர்கள்
(6045)


## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு கடந்த 25 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக அரச மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் தாய்ச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியு ள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கை யில்,

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமா னது தனது 90 ஆவது ஆண்டை இவ்வரு டம் பூர்த்தி செய்யவுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு நாடு முழுவதும் பல கிளைச் சங்கங்கள் உள்ளன.

அந்த வகையில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் கிளை அதன் 107 ஆவது கிளைச சங்கமாக இணைந்து கொள்கின்றது.?

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் கிளைத் தலைவராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபு ணர் ருக்மல் குணத்திலகவும், செயலாளராக பருத்தித்துறை சுகாதர வைத்திய அதிகாரி கணேசதாசன் செந்தூரனும் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை உப தலைவராக வைத்தியர் மோகனகுமார், உபசெயலாளராக வைத்தியர் நிஷாந்தன், பொருளாளராக வைத்தியர் ரிஷான் மற்றும் பத்திராதிபராக வைத்தியர் சுதந்திரமதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ-9)


உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-5126)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 31 12 1996
உதிர்வு 31 08 2016

பிரசாந்தி வெற்றிவேலு

கடந்த 31.08.2016 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம் பிரசாந்தி வெற்றிவேலு அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 30.09.2016 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந் நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது மகள் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சை அளித்த யாழ். போதனா வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, ஆசிரி சென்றல் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலமும் தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித் தவர்களுக்கும் பலவழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு :- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
077 899 5685, 021 205 6096
- குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி



கிளி/பன்னங்கண்டி இ.த.க பாட சாலையின் முன்னாள் அதி பர் திரு.நா.உதயகுமார் அவர் களது அன்புத் தந்தை
அமரர்
நாகராசா
அவர்கள் 25.09.2016 அன்று இறைபதமடைந்தமையை யிட்டு எமது ஆழ்ந்த அனுதா பத்தை தெரிவிப்பதோடு அன் னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
அதிபர்கள் சங்கம் - கிளிநொச்சி மாவட்டம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை
## Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.


**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி ஸ்ரீசீரடி சாயி மந்திரின் 8 ஆவது வருட ஸ்ரீசீரடி சாயி நாதரின் வருடாந்த திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (இ-3)



## போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில்

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஜெனிவாவில் தமிழர்கள் போராட்டம்

## பாரிய கவனயீர்ப்பாக முன்னெடுக்கப்பட்டது

(ஜெனிவா)

**ஈழத் தமிழர்கள் மீது இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான கொடூரங்களுக்கு நீதி வேண்டி சுவிட்சர்லாந்துத் தலைநகர் ஜெனிவாவில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் திரண்டு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.**



ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 33 ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையிலேயே நேற்று முன்தினம் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் ஈழத் தமிழ் மக்களவை ஆகிய புலம்பெயர் அமைப்புக்கள் இணைந்து ஜெனிவாவில் இந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் சுவிட்சர்லாந்தில் வாழும் ஈழத் தமிழர்கள் மாத்திரமன்றி பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, நோர்வே உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிக்கொடிகளையும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப் படங்களையும் தாங்கிய வண்ணம் திரண்டிருந்த புலம்பெயர் தமிழர்கள் தமிழ் மக்களுக்கான நீதியை தாமதப்படுத்தாது நிலை நாட்டுமாறு வலியுறுத்தும் கோசங்களை எழுப்பினர்.

ஜெனிவா தொடருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்காவிலிருந்து ஆரம்பமான பேரணி ஜெனிவா ஐ.நா. முன்றல் வரை இடம்பெற்றது.

இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கு நீதியை வலியுறுத்தினர்.

காணாமற்போனோர் அலுவலகம் என்ற பெயரில் காணாமற்போனோர் விடயத்தை தொடர்ந்தும் இழுத்தடிக்க இலங்கை அரசாங்கம் முற்படுவதாக குற்றம்சாட்டிய ஈழத் தமிழர்கள் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காக அமைக்கப்படவுள்ள உள்ளக நீதிமன்ற பொறிமுறையாலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டனர்.

இதனால் சர்வதேச சமூகம் நேரடியாக தலையிட்டு சர்வதேச மட்டத்திலான சுயாதீன விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்ததுடன், இனியும் காலம் கடத்தாது அதனை சர்வதேச சமூகம் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தலைமை சட்ட ஆலோசகர் பரிந்துரைத்துள்ள நிலையில் புலம் பெயர் தேசத்தில் நடைபெற்ற முதலாவது பேரணி இதுவென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ)

## சர்வதேச பொலிஸ் மாநாடு ஒக்டோபரில் இலங்கையில்

(கொழும்பு)

சர்வதேச பொலிஸ் மாநாடு ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4,5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் இலங்கையில் இந்த மாநாடு நடத்தப்பட உள்ளது.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் 40 உயர் பொலிஸ் அதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

சர்வதேச போதைப் பொருள் வர்த்தகம், ஊழல் மோசடி தவிர்ப்பு, குற்றச்செயல்களை தடுத்தல் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள்தொடர்பில் இந்த மாநாட்டில் அவதானம் செலுத்தப் படவுள்ளது.(இ-7-10)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஒய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# அயர்லாந்தை வீழ்த்திய ஆஸி.

அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 30-ம் திகதி தொடங்குகிறது. அதன்பின் இரண்டு அணிகளும் அயர்லாந்துக்கு எதிராக தலா ஒரு போட்டியில் விளையாட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி நேற்று அவுஸ்திரேலியா - அயரலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெற்றது.






நாணய சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அந்த அணியின் போர்ட்டர்பீல்ட், ஸ்டிர்லிங் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 9.2 ஓவர்கள் முடிவில் 47 ஓட்டங்கள் சேர்த்தது. ஸ்டிர்லிங் 30 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த அண்டர்சன் 39 ஓட்டங்களும் போர்ட்டர்பீல்ட் 24 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழந்தனர். அப்போது அயர்லாந்து 24.5 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

அதன்பின் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அயர்லாந்து அணி 43.5 ஓவர்கள் முடிவில் 198 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அவுஸ்திரேலியா அணி சார்பில் சம்பா 3 விக்கெட்டும், ஹாஸ் டிங் மற்றும் போலந்து ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள். 199 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலியா ஒரு விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஹவஜா தெரிவானார். (க)

## ஷஹிப் அல் ஹசன் சாதனை

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி யின் முன்னணி சகல துறை வீரராக திகழ்ந்து வருபவர் ஷஹிப் அல்ஹசன். கடந்த 2006 ஆம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அறிமுகமான இவர், நேற்று முன் தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 10 ஓவர்கள் வீசி 2 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.




முதல் விக்கெட்டாக ஷபிர் நூரியை எல்.பி.டபிள்யூ. மூலம் வீழ்த்தினார். இதன்மூலம் 206 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையை பெற்றிருந்த அப்துர் ரஸாக் சாதனையை சமன் செய்தார்.

அதன்பின் ரஹ்மாத் விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் 207 விக்கெட்டுக்கள் வீழ்த் திய ஷஹிப் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய பங்களாதேஷ் வீரர் என்ற சாதனை படைத்தார். இது பற்றி சாகிப் கூறுகையில், அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற செய்தி சிறந்த உணர்வைத் தருகிறது.

ஆனால், அனைத்து வகை கிரிக்கெட்டிலும் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற பெருமையை பெற்றிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். மேலும், எனக்கு துடுப்பாட்டம வாய்ப்பு அதிகமாககிடைக்கவில்லை என்று நகைச் சுவையாக குறிப்பிட்டார். (க)

# சர்வதேச டெனிஸ் தரவரிசை சானியா தொடர்ந்து முதலிடம்



உலக டெனிஸ் வீரர்- வீராங்கனைகளின தர வரிசைப்பட்டியலை சர்வதேச டெனிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதில் பான் பசிபிக் ஓபன் போட்டியில் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற சானியா மிர்சா (9,730 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வருகிறார்.

சானியாவின் முன்னாள் ஜோடியான சுவிட்சர்லாந்து வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ் 2வது இடத்திலும், தற்போதைய ஜோடியான செக் குடியரசு வீராங்கனை பார்போரா 18வது இடமும் பிடித்துள்ளனர்.

அதேபோல் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியா வீரர் ஜோகோவிச் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 4 இடம் முன்னேறி 60வது இடத்தை பிடித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் முதலிடத்தில் தொடருகிறார். அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 2வது இடத்தை பெற்றுள்ளார். (க)

# பீட்டர்ஸ்பர்க் டெனிஸ் தொடர் அலெக்சாண்டர் சம்பியன்

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் முதல்முறையாக ஏ.டி.பி. ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

ரஷ்யாவில் நடந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ஓபன் சர்வதேச டெனிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தர வரிசையில் 24-வது இடத்தில் இருக்கும் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் அமெரிக்க ஓபன் சம்பியன் வாவ்ரிங்காவை (சுவிட்சர்லாந்து) எதிர்கொண்டார்.

2 மணி 23 நிமிடம் நீடித்த விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 19 வயதான அலெக்சாண்டர் 6-2, 3-6, 7-5 என்ற செட் கணக்கில் வாவ்ரிங்காவை வீழ்த்தி முதல்முறை யாக ஏ.டி.பி. ஒற்றையர் பட்டத்தை வென்றார். (க)



# கொல்கத்தா டெஸ்டில் களமிறங்கும் கம்பீர்

கொல்கத்தாவில் நடக்கவிருக்கும் டெஸ்டில லோகேஷ் ராகுலுக்குப் பதிலாக கவுதம் கம்பீர் இடம்பிடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய அணியின் தொடக்க வீரராக அசத்தி வந்த கவுதம் கம்பீர், மோசமான உடற்தகுதி காரணமாக கடந்த 2014ல் இருந்து அணியில் சேர்க்கப்படவில்லை. கடைசியாக ஓவலில் நடந்த போட்டியில் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 3 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது கம்பீர் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். துலீப் தொடரிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் முதல் டெஸ்டில் லோகேஷ் ராகுலுக்கு தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதனால் கொல்கத்தாவில் நடைபெற இருக்கும் 2வது டெஸ்டில் அவர் இடம் பிடிக்க மாட்டார் என்று கூறப்படுகிறது.



லோகேஷ் ராகுல் இடம்பெறாவிட்டால் கம்பீருக்கு அணியில் இடம்கிடைக்கும் என கூறப்படுகிறது. (க)

# பதில் பிரதம நீதியரசராக பிரியசாத் டெப் பதவியேற்பு



உச்சநீதிமன்ற நீதிபதி பிரியசாத் டெப் பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பீ பீ அபேகோனும் பிரசன்னமாகியிருந்தார்.

## கருத்தூன்றல் களம் கலந்துரையாடல்

ஆறுதல் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள கருத்தூன்றல் களம் நிகழ்ச்சியில் கலாநிதி பால. சிவகடாட்சத்தினால் பண்டைத் தமிழரின் அறிவியல் கருத்துக்கள் என்னும் தலைப்பில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடல் தொடர்பான அறிமுகம் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனால் நிகழ்த்தப்படவுள்ளது. (செ)

## ஜோதிடத் தகவல்

### சர்க்கரை நோய் வரும் நிலை

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் பலமாக இருக்குமானால் இன்பங்கள் அனைத்தும் அவருக்கு கிடைக்கும். ஆனால் சுக்கிரன் சர்க்கரைக்கு அதிபதி ஆவார். எனவே இவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்பு அதிகம். சர்க்கரை நோய் குறிப்பாக பணக்காரர்களை குறி வைத்து தாக்குவதின் ரகசியம் இதுதான்.

## மலர் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம 225 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடு, ஆச்சிரம சுவாமிகள் கட்டுரையாளர் கௌரவிப்பு என்பன எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன. (இ-3)

# அடுத்தவர் உழைப்பில் கோத்தா பெயர் பதிக்க முயற்சிக்கிறார்!

## மேஜர் அஜித் பிரசன்ன சீற்றம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அடுத்தவர் உழைப்பில் பெயர் பதித்துக் கொள்ளும் ஒருவர் என்று மேஜர் அஜித் பிரசன்ன சீற்றம் தெரிவித்துள்ளார். தடுப்புக் காவலில் இருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற மேஜர் விமல் விக்கிரமகே என்பவர் அண்மையில் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் கொல்லப்பட்ட இளைஞரின் குடும்பத்துக்கு அவர் 20 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் மேஜர் விமல் விக்கிரமகேவின் செயற்பாடு தேசப்பற்றின் அடிப்படையில் நடைபெற்றது என்றும் எனவே நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையை பொதுமக்கள் இணைந்து சேகரித்துக் கொடுக்க வேண்டும் என்றும் தாய்நாட்டுக்கான இராணுவ அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்காக அமைப்பின் தலைவரும், தென்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான மேஜர் அஜித் பிரசன்ன பேஸ்புக் ஊடாக நிதி சேகரிப்புக் கோரிக்கை ஒன்றை முன் வைத்திருந்ததுடன், கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் நிதி சேகரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவும் செப்டெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஆர்வம் காட்டியிருந்தார்.

ஒருசில நாட்களுக்குள்ளாகவே குறித்த 20 இலட்சம் ரூபா நிதி சேகரிப்பு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதில் பெருமளவான நிதி மேஜர் அஜித் பிரசன்னவின் பேஸ்புக் ஊடான வேண்டுகோள்கள் வழியாகவே கிடைத்திருந்தது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் மேஜர் விமல் விக்கிரமகேவிடம் குறித்த நிதியை வழங்கி வைத்துள்ளனர்.

இதற்கு மேஜர் அஜித் பிரசன்னவை அழைக்கவோ, அவரது பெயரை எந்தவொரு இடத்திலும் குறிப்பிடவோ இல்லை.

இது குறித்து கடும் சீற்றமடைந்துள்ள மேஜர் அஜித் பிரசன்ன, கோத்தபாய எப்போதும் அடுத்தவரின் உழைப்பைத் திருடி தன் பெயரைப் பதித்துக் கொள்ளும் வழக்கம் கொண்டவர் என்று சாடியுள்ளார்.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான உண்மைகளை வெளியிடும் வகையிலும் விரைவில் மேஜர் அஜித் பிரசன்ன ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (செ)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 09 1970

இறப்பு 28 09 2014



**அமரர் பாமதி அமிர்தகுமார்**
**(ஆசிரியை அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)**



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிய எம் தெய்வமே
ஆண்டிரண்டு ஓடி மறையும் இந்நாளில்
உமது ஆத்மா சாந்திக்காக அஞ்சலிக்கின்றோம்
ஓம் சாந்தி!

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(6043)

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

28.09.2016
(புரட்டாதி 12, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 3.43 மணிவரை
மகம் முன்னிரவு 7.38 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை — சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவோணம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | | | |
| | | | ராகு புதன் சந் |
| செவ் | சனி | சுக் | குரு சூரி |

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற சிவனை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றகரமாக அமையும், விரதம், வழிபாடுகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பயணங்களால் பலன் கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு:** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றும் நாள்.

**மகரம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், எடுத்த கருமங்கள் கைகூடும், கௌரவமான நாள்.



தமிழ் மக்களின் உரிமைக்காக உண்ணாநோன்பிருந்து தன்னுயிரைத் தியாகம் செய்த லெப் கேணல் திலீபனின் 29 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் கந்தர்மடத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து தியாகதீபம் திலீபனது தியாகத்தினை நினைவு கூரும் முகமாக இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

## நல்லைக்கந்தன் உற்சவ காலத்தில் யாழ்.மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற தேறிய வருமானம் ரூபா 11.7மில்லியன்

அண்மையில் இடம்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற தேறிய வருமானமானது ரூபா 11,713,358.78 காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடரில் யாழ் மாநகர சபை ஆணையாளர் அனுப்பிவைத்த பத்திரிகைக் குறிப்பு

2016 ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா ஆலய உற்சவகாலத்தின் போது தற்காலிக கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், விளம்பர பதாகைகள், சித்தமருத்துவ மருந்து விற்பனை, சஞ்சிகை விற்பனை, கழிவகற்றல் வருமானம் மற்றும் நன்கொடை மூலம் மாநகர சபைக்குக் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானம் VAT, NBT உட்பட ரூபா 19,270,675.53 ஆகும்.

உற்சவத்தின் போது வழங்கு பொருட்கள், பயன்பாட்டுச் சேவைகளிற்கான கொடுப்பனவு, மேலதிக வேலைக்கான கொடுப்பனவு மற்றும் விளம்பர செலவுகள் உட்பட மொத்தமாக ரூ7,557,316.78 செலவிடப்பட்டுள்ளது. செலவிலும் கூடிய வருமானமாக ரூ.11,713,358.75 காணப்படுகின்றது.

மேலும் சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது வருமானமானது 29.45 வீதத்தால் அதிகரித்திருப்பதோடு செலவீனமும் 28.19 வீதத்தால் அதிகரித்துள்ளது. பெருந் திருவிழாக்காலத்தில் நல்லூர் வெளிவீதி கண்காணிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட கண்காணிப்புக்கமரா மற்றும் பணியாள் தொகுதியினின் மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் செலவீன அதிகரிப்பின் பெரும் பிரதான காரணிகளாகின. எனினும் தேறிய வருமான அதிகரிப்பு சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 30.28 வீதத்தால் அதிகரித்துள்ளது. இவ்வருமானமிகை மக்கள் நலத்திட்டங்களுக்காக செலவிடப்படும்.

மொத்த வருமானத்தில் செலவீனமானது சென்ற வருடம் 40 வீதமாக காணப்படும் அதேவேளை இவ்வருடம் 39 வீதமாக காணப்படுகின்றது. வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான விபரமான அறிக்கையினைப் பார்வையிட விரும்புவோர் மாநகர சபையின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பார்வையிடலாம் என யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (செ)

## யாழ்.பல்கலையில் அமைக்கப்பட்டுள்ள நீர்வடிகட்டியை 2 ஆம் திகதி ஜனாதிபதி திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படுள்ள நீர் வடிகட்டியை எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்த்தாங்கியை கடற்படையினரே கட்டியுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் விடுதியில் போதிய நீர் வடிகட்டிகள் இன்மையால், குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாக மாணவர்கள். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் ஜனாதிபதிக்கும் சுட்டிக்காட்டி கடந்த மாதம் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் மாணவர்களின் குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதன் பிரகாரம் பல்கலைக்கழக மாணவர் வளாகத்தில் ஒரு பெரிய நீர்வடிகட்டியை அமைக்க ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்தது.

அந்த நீர்வடிகட்டியை இரு வாரத்தினுள் உடனடியாக அமைக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டனர். அதனை ஜனாதிபதி எதிர்வரும் 2ஆம் திகதி திறந்து வைப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)




## வீதிப் புனரமைப்பு குறித்து மக்கள் விசனம்



நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் தொடக்கம் சங்கயான் வீதி சின்னப்பா வீதி இணைப்புவரை புதிதாகதார்வீதி நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

இவ் வீதி வேலைகளுக்கு தரமற்ற கற்களைப் பயன்படுத்துவதாக மக்கள் விசனப்பட்டுள்ளனர். குறித்த வீதிப்புனரமைப்பு பழைய வீடு உடைத்த கற்கள், பழைய சீமெந்து பூச்சுத் துண்டுகள், முருகைக் கற்கள் என்பன வீதிப் புனரமைப்பு பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே இதனைக் கவனத்திற்கு கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ-3)

## புதிய வெளிச்சம் நிகழ்வு

தமிழகத்தின் கோயம்புத்தூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் ஆற்றுப்படுத்துகை மற்றும் மனித விழுமியங்கள் தொடர்பாக கலைஞர் தொலைக்காட்சியினூடாக உளவளத்துணை ஆலோசனைகளை வழங்கி வரும் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணனின் புதிய வெளிச்சம் என்ற நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



ஆர்வமுள்ள மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறந்த கருத்துக்களைப் பெற்றுச் செல்வதற்கேற்ற வகையில் நிகழ்வு இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ)

## வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வும்

யாழ்.சித்தன்கேணி வட்டு இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், கௌரவ விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (வட மாகாணம்) திருமதி பி.செல்வின் இரேனியஸ், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## திக்கம் பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா இன்று

திக்கம் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த கலை விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திக்கம் கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.

திக்கம் பாலர் பாடசாலைப் பணிப்பாளர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் செ.சுதாகரன், கௌரவ விருந்தினர்களாக பரந்தன் வேலும் மயிலும் அரிசி ஆலை உரிமையாளர் க.செல்வகாதரன், கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்துடனும் அஜெண்டா14 உடனும் இணைந்து ஏற்பாடு செய்த இரண்டாவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழா கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

## இந்து வாலிபர் சங்கத்தினால் வாழ்வாதார உதவி வழங்கல்

கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பமான மதியமுதன் சுகந்தினியின் குடும்ப வாழ்வாதாரத்திற்காக 2.5 ஆயிரம் ரூபா வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சார்பில் சமூக சிந்தனையாளன் மு.யோகநாதனால் வழங்கி வைக்கப் பட்டது.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கான புகைப்படம் - 2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவைக்கான 2016 ஆம் ஆண்டுக்கான புகைப்படங்கள் 01.10.2016 (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவை அங்கத்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(வி-5925) பதிவாளர்

## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் முதலாம் அரையாண்டு பரீட்சைகள்- 2015

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 17.10.2016 ஆம் திகதி முதல் 26.10.2016 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 28.09.2016 ஆம் திகதி முதல் 30.09.2016ஆம் திகதி வரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(வி-5924) 26.09.2016.


## வேலையாட்கள் தேவை

எமது அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொ.077 282 4321 முகவரி கே.கே.எஸ்.வீதி, முட்டாஸ் கடைச் சந்தி, யாழ்ப்பாணம்.

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)




நவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளிவரவுள்ள நவராத்திரி பாமாலைக்கு மாணவர்கள் தங்கள் கவிதைகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

ஆசிரியர்
நவராத்திரி பாமாலை,
இல..3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

யாழ்.மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்குரிய (2017) கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
02. மல்லாகம் நீதிமன்ற வளாகம்
03. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
04. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
05. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
06. யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றம்

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் ஒவ்வொரு நீதிமன்ற வளாகத்துக்கும் தனித்தனியே மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ 25000/= ஐயும் செலுத்தி 20.10.2016 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 20.10.2016 பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பிற்பகல் 2.00 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

மா.இளஞ்செழியன்,
மேல்நீதிமன்ற நீதிபதி / தவிசாளர்,
மேல் நீதிமன்ற பெறுகைக்குழு,
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
(வி-5998)

## மாணவ முதல்வர் தினம் இன்று

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினம் இன்று 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறும்

சிரேஷ்ட மாணவ முதல்வர் செல்வன் தெ.ஆதவன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


அன்பு வாசகர்களே! உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber


## காலணிகள் வழங்கும் நிகழ்வு



வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் தனிப்பட்ட செயற்றிட்டத்திற்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து 90 மாணவர்களுக்கான காலணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 19.25
உயரம்: 158cm
தகைமை/தொழில்:வைத்தியா (அரச)
எதிர்பார்ப்பு: Dr தொழில்/உயர் தொழில்
தொ.இ: B/5133

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 39 செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L கடை சொந்தம்
தொ.இ: B/5134

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
கி.பா: 23.25
உயரம்: 5'1"
தகைமை/தொழில் O/L ரைவிங் டோகா
எதிர்பார்ப்பு: வெளி/உள்நாடு/அரச தொழில்
தொ.இ: B/5135

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 25
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MD.Dr
தொ.இ: B/5140

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 18.75
உயரம்: 5'
தகைமை/தொழில்: கனடா Accounting Dip
எதிர்பார்ப்பு:வெளிநாடு, உள்நாட்டு உத்தியோகம்
தொ.இ: G/2159

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 15.5
உயரம்: 163cm
தகைமை/தொழில்(Cima)UK விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு அரச, தனியார் தொழில்,
தொ.இ: G/2160

பிறப்பு: 1973 RC
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: 28.5 செவ் 8இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/2169

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 37 செவ் 8 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்:O/L
தொ.இ:G/2170

கல்யாண மாலை
(சர்வதேச) 021 720 1005, 021 221 5434
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# திட்டங்களை மேற்பார்வை செய்வதன் மூலம் குறுகிய காலத்தினுள் நிறைவேற்ற முடியும்

## வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர்



வடக்கு மாகாணத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான 2120 கிலோ மீற்றர் வீதிகள் உள்ள நிலையில் அதில் ஏறத்தாழ 400 கிலோ மீற்றர் வீதிகளே இதுவரை ஒதுக்கப்பட்ட நிதிகளினூடாக புனரமைக்கப்பட்டு பாவனைக்கு உகந்தவையாக காணப்படுகின்றன.

அந்த வகையில் ஏனைய வீதிகள் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் புனரமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். வன்னேரிக்குளம் பல்லவராயன்கட்டு பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நேரடியாகச் சென்று பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

வன்னேரிக்குளம் பல்லவராயன் கட்டு பிரதான வீதியானது மன்னார் யாழ்ப்பாணம் (ஏ32) பிரதான வீதியோடு இணைக்கப்படும் வீதி என்பதோடு, கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மண்டைக்கல்லாறு பகுதி வெள்ளம் காரணமாக மன்னார் யாழ்ப்பாணம் போக்குவரத்து தடைப்பட்டிருந்த அந்தக் காலப்பகுதியில் குறித்த வீதியினூடாகவே யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கான பயணத்தை மக்கள் மேற்கொண்டனர். அந்த சமயத்தில் அமைச்சர் டெனீஸ்வரன் மக்களோடு கலந்துரையாடிய வேளையிலே மக்களது முறைப்பாட்டிற்கு அமைவாக வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான குறித்த வீதியை 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 6 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கி குறித்த வீதியின் 532 மீற்றர் தூரத்தை பாடசாலை, வைத்தியசாலை மற்றும் மக்கள் பாவனை அதிகமாகவுள்ள பகுதியை தார் வீதியாக போடவும், அதிகமாக நீர் வீதிக்கு குறுக்கே வழிந்தோடும் இரண்டு இடங்களை இனங்க ண்டு அந்த இடங்களில் 2 மதகுகள் அமைக்கும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார். இவ்வாறு இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டங்களில் தற்போது வீதியானது 90% நிறைவடைந்துள்ளதுடன் குறித்த மதகுகள் அமைக்கும் பணியும் ஓரிரு வாரங்களுக்குள் நிறைவடையவுள்ளது.

குறித்த இடத்தை நேரடி விஜயம் செய்து பார்வையிட்ட அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் வருடம் ஐ ரோட் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூராட்சி மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வீதிகள் அடங்கலாக தலா 200 கிலோ மீற்றர் வீதம் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அத்திட்டத்தில் குறித்த வன்னேரிக்குளம் பல்லவராயன் கட்டு பிரதான வீதியும் இணைக்கப்பட்டுள்ளது.

ஐ ரோட் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் மாகாணத்தில் பெருமளவு வீதிகள் புனரமைக்கப்பட்டுவிடும் என தெரிவித்தார்.

எது எவ்வாறு இருப்பினும் அனைத்து அமைச்சுக்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகளை சரியானதாகவும், மக்களுக்கு பயனுள்ள வகையிலும் செலவு செய்யவேண்டுமெனில் குறித்த துறைகள் சார்ந்த அமைச்சர்கள், திட்டங்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு விஜயம் செய்து அவற்றை தொடர்ந்து மேற்பார்வை செய்வதனூடாகவே அங்குள்ள பிரச்சினைகளை இனங்கண்டு விரைவாக குறித்த காலத்தினுள் திட்டங்களை நிறைவு செய்து மக்களது பாவனைக்கு கொடுக்க முடியும் என்று மேலும் தெரிவித்தார். (2-312)

# வட்டுவாகல் நீரேரியில் தவறி விழுந்த சிறுவன் பரிதாபகரமாக மரணம்

(மல்லாவி)

வட்டுவாகல் நீரேரியில் தவறி விழுந்த சிறுவன் பரிதாபமாக மரணமடைந்தான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதன்போது வட்டுவாகலைச் சேர்ந்த பிரபாகரன் ஷர்மிலன் (வயது-04) என்ற சிறுவனே மரணமடைந்தவனாவான். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வட்டுவாகல் நீரேரிக்கு அருகில் இருந்த பிரஸ்தாப சிறுவனின் வீட்டில் அயலில் உள்ள சிறுவன் ஒருவன் வந்து விளையாடிக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் நேர்ந்துள்ளது.

நீரேரியினுள் சிறுவன் விழுந்த சம்பவம் தெரியாத பெற்றோர் அயல் வீட்டு சிறுவனுடன் விளையாடிக் கொண்டிருப்பதாக நினைத்து சிறுவனை காணாத நிலையில் தேடிய போது பிரஸ்தாப சிறுவனை மேற்படி நீரேரியினுள் இருந்து மீட்டனர். இதன்பின்னர் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-5-310-15)




# மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகாமையிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் கிளி.மாட்ட அ.சே.ஓ.ஊ.ந. நிதியத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக கிளி. மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கிளி.மாவட்ட மேலதிகச் செயலர் சி.சத்தியசீலன், உதவி மாவட்டச்செயலர் த.பிருந்தாகரன், திட்டப்பணிப்பாளர் ச.மோகனபவன், பிரதம கணக்காளர் ஜே.கில்பேட்குணம், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி.ஜெ.பரமோதயன், பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.கௌரவ விருந்தினர்களாக முன்னாள் மாவட்டச் செயலர் தி.இராசநாயகம், உதவித்தலைவர் எஸ்.சுப்பிரமணியம், அம்பாறை முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லத்துரை ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (2-5-254)







கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கடற்கரையோரத்தில் அமைந்திருக்கின்ற கொம்படி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 26 வருடங்களுக்குப் பின் நேற்றுக் காலை 108 பாற்குட பவனியுடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் ஆவரஞ்சாட்டி குஞ்சுப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து 108 பெண்கள் மஞ்சள் ஆடையணிந்து பாற்செம்புகளுடன் சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் வரை பவனியாக எடுத்து வரப்பட்டு 1008 இளநீர், 1008 சங்குகள் மற்றும் பவனியில் கொண்டு வரப்பட்ட 108 பாற்செம்புகளினால் கொம்படி அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலய திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர் )

# மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்

## தொழில்சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு





கிளிநொச்சி தொழில் பயிற்சி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் பயிற்சி கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு தொழில்சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 14 மாற்றுத்திறனாளிகள் மற்றும் 16 இளைஞர், யுவதிகளுக்கு குறித்த தொழில்சார் உபகரணங்கள் நேற்று முன்தினம்வழங்கிவைக்கப்பட்டன.

ரகமா நிறுவனத்தின் உதவியுடன் வழங்கி வைக்கப்பட்ட குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் என்னிடம் உள்ளது. குறித்த விடயம் தொடர்பில் கிளிநொச்சியில் கடமைகளை பொறுப்பெடுத்த போது மாற்றுத்திறனாளிகளை சந்தித்திருந்தேன்.

அப்போது அவர்களுக்கான பல திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுத்து செல்வதற்கு வருகை தந்திருந்தவர்களிடம் முழுமையான தகவல்களை வழங்குமாறு கோரியிருந்தேன். இதுவரை எவ்வித தகவல்களும் வழங்கப்படாமையை இட்டு கவலை அடைவதாக தெரிவித்த அவர், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு தயாராகவே உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-5-15)

# இறுவெட்டு வெளியீடு

எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி கைதடி அரச முதியோர் இல்ல திறந்தவெளி அரங்கில் ஆரம்பமாகவுள்ள முதியோர் வார நிகழ்வில் வைத்து கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவு சிவநகர் முத்தோர் சங்கத்தின் பாடல் இறுவெட்டு வெளியிடப்படவுள்ளது. கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக்கல்லூரி அனுசரணையுடன் வெளியிடப்படும் பாடல்களைச் சங்கத்தலைவர் அ.இரகுபதி எழுத்தாக்கம் செய்துள்ளார்.

ஆசிரியை எம்.சி.குலாஸ் பாடலுக்கான இசையமைப்பை செய்துள்ளதுடன் திருமதி. ஜெயந்தி. வி.தேனுகா, திருமதி. எம்.சி. குலாஸ் , அ.ஜீவிதன் ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். ஒலிப்பதிவினை மலையவனும் தபேலா சாந்தனும் வழங்கியுள்ளனர்.

இப்பரந்த உலகில் வாழும் முத்தாளர்கள் அனைவரையும் கௌரவிக்கும் வகையில் வெளியிடப்படும் என கிளி.சிவநர் முத்தோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-254)

# காலபோக நெற்செய்கையின் உரமானிய கொடுப்பனவிற்கான இறுதிப் பதிவுகள்

## ஒலுமடு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநல சேவை நிலையத் திற்குட்பட்ட கமக்கார அமைப்பின் கீழுள்ள விவசாயிகளுக்கான 2016-2017 காலபோக நெற்செய்கையின் உரமானியக் கொடுப்பனவிற்கான விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய் யாதவர்களுக்கான இறுதிப் பதிவு திக தியை ஒலுமடு கமநல சேவை நிலை யத்தின் கமநல அபிவிருத்தி உத்தி யோகத்தர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-,

இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமையும் காலை 9 மணி தொடக்கம் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் கால போக நெற் செய்கையில் ஈடு படும் விவசாயிகளுக்கு உர மானிய கொடுப்பனவு விண் ணப்பப்படிவத்தை பதிவு செய் யத் தவறியவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இதே போல் மேற்படி திகதி களில் மேட்டுப் பயிர்களான மிளகாய், வெங்காயம், சோளம், உருளைக் கிழங்கு , சோயா , அவரை ஆகிய பயிர்களை செய்கை பண்ணுபவர்களு க்கான உரமானியக் கொடுப் பனவிற்கான விண்ணப்பப் படிவம் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் காலை 9 மணி க்கு பதிவுகள் மேற்கொள்ள ப்படும்.

பதிவுகளை மேற்கொள்ள வருகை தரும் போது, தங்கள் பகுதி கமக்கார அமைப்பு க்க ளிடம் பயிர்ச் செய்கை மேற் கொள்ளவுள்ள ஏக்கர் அளவை உறுதிப்படுத்திய கடிதத்துடன் ஏற்கனவே அறிவிக்கப்பட் டுள்ள ஏனைய ஆவணங் களையும் தம்முடன் எடுத்து வருமாறு அவர் அறிவித்து ள்ளார். (2-15)

## கிராஞ்சிக் கிராமத்தில் மரநடுகை நிகழ்வு

(மல்லாவி)

மகாத்மா காந்தி அடிக ளின் 147 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சரஸ் வதி பிருந்தாவனம் அறக் கட்டளை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் ஐந்தா ண்டு மர நடுகைத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டுத் திட்டத் திற்கமைவாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூநகரி சிவபுரம் கிராஞ்சிக் கிராமத்தில் மரநடுகை நிக ழ்வு நடைபெறவுள்ளது.

மரநடுகை நிகழ்வில் தென்னை, பனை, வேம்பு, புளி, நாவல், இலுப்பை போன்ற மரங் களை நாட்டி கிராமத்தை வளமாக்குமாறும் மரங்கள் நடுவதற்கு வசதி இல்லா தவருக்கு மரக்கன்று வழங் கப்படும் எனவும் நிர்வாக அறங்காவலர் தெரிவித்துள் ளார்.

மேலதிக விபரங்களு க்கு 077 813 2314 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-5)




## மதுபான நிலையத்தை மூடுவது தொடர்பில் இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்

### அமைச்சர் றிசாத் உறுதி

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலி நகர் கிராமத்தில் மக்கள் குடி யிருப்பிற்கு மத்தியில் இயங் கும் மதுபான விற்பனை நிலையத்தை மூடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்த ராஜாவினால் முன்வைக்கப் பட்ட பிரேரணையை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட துடன் எதிர்வரும் முல்லைத் தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தின் போது இறுதித் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்துவதற் கான ஒழுங்குகள் மேற் கொள் ளப்படும் என அமைச்சர் றிசாத் பதியூதீன் உறுதி மொழி வழ ங்கியுள்ளார்.

மேற்படி பிரேரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்ப மான மாந்தை கிழக்கு பிரதேச மட் டத்தில் நடைபெற்ற அபி விருத்திக்குழுக் கூட்டத்தின் போதே பாராளுமன்ற உறுப்பி னர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந் தராசா வினால் மேற்படி பிரே ரணை முன்வைக்கப்பட் டது. (2-5-15)






*வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமை ச்சினால் மன்னாரில் நடத்தப்பட்ட பண்பாட்டு பெருவிழா அண்மையில் நடைபெற்றது. முதலமை ச்சர் விருது வழங்கல் நிகழ்வில் கவிஞர் வேலணை யூர் சுரேஷ் இயற்றிய இரண்டு நூல்களுக்கு சிறந்த நூல்களுக்கான விருதுகள் கிடைத்துள்ளன.*

*கிளுவம்வேலியும் கிடுகுத் தட்டியும் (கவிதைத் தொகுப்பு), புதுக்கவிதை இலக்கியத்திற்கும் பிள்ளைத் தமிழின்பம் குழந்தை இலக்கியத்திற்கும் என இரண்டிற்கும் சிறந்த நன்னூல் விருதுகளை கவிஞர் சுரேஷ் பெற்றுள்ளார். பண்பாட்டுப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் இல க்கியத்துறை சார்ந்த பத்து விருதுகள் வழங்கப் பட்டன. யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தேசப்பிரிய ஆகியோர் முன்னிலையில் இவ்விரு துகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

## சட்டவிரோத மதுபான நிலையங்களுக்கு எதிராக மன்னாரில் நடைபெற்ற பேரணி

(மன்னார்)

கல்வியில் முதல் நிலை யில் இருந்த யாழ்ப்பாணம் போதைப் பொருட்களின் பாவனை காரணமாக தற் போது 23 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக மன் னார் மாவட்ட பெண்கள் சமாசத்தின் தலைவி அமிர் தநாதன் மல்லிகா தெரிவித் தார்.

போதைப்பொருள் பாவ னைக்கு தற்போதுள்ள சமூ கம் அடிமையானமையி னால் வடக்குமாகாணம் கல் வியில் பின்னோக்கி சென் றுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

நல்லாட்சியில் போதை க்கு முற்றுப்புள்ளி என்ற தொனிப்பொருளில் சட்ட விரோத மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேரணி ஒன்று முன்னெ டுக்கப்பட்டது.




மன்னார் மாவட்ட பெண் கள் சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணி மன்னார் - நெடுங்கண்டல் பிரதேசத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 10.30 அளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தி ற்கு முன்பாக நிறைவ டைந்தது.

இந்த பேரணியில் கலந்து கொண்டவர்களால் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக் கப்பட்ட நிலையிலேயே நல் லாட்சி அரசாங்கம் வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையை கட்டு ப்படுத்துமாறு மன்னார் மாவ ட்ட பெண்கள் சமாசத்தின் தலைவி அமிர்தநாதன் மல்லிகா கேட்டுக்கொண்டார்.(2-5-281)

## கிராம,மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்தார் மஸ்தான் எம்.பி

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தி லுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க ங்கள் சமாசத்தின் வேண் டுகோளுக்கு இணங்க வன்னி மாவட்ட பாராளுமன்ற உறு ப்பினரும் மாவட்ட அபிவி ருத்திக்குழு இணைத் தலை வருமான காதர் மஸ்தானின் ஏற்பாட்டின் கீழ் கடந்த 25 ஆம் திகதி அன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் கிராம அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலொ ன்று இடம்பெற்றது.



குறித்த இக்கலந்துரை யாடலில் 173 அமைப்புக்க ளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் கிராமங் களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கிராம மட் டத்தில் காணப்படும் பிரச் சினைகள் தொடர்பாகவும் மக்களின் கருத்துக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் முன்னிலையில் பிரதேச செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர் , பிரதேச சபை செயலாளர் , மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள்,சமாசத்தின் தலைவர் போன்றோர் பதில ளித்தனர்.

இந்த கூட்டத்தில் கே.கே. மஸ்தான் எம்.பி உரையா ற்றுகையில,

இவ் அமைப்புக்கள் சார் பாக முன்வைக்கப்பட்ட பிர ச்சினைகள், கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக் கள் மற்றும் உயர் அதிகாரிக ளுடன் நேரடியாக சந்தி த்தித்துப் பேசி விரைவில தீர்வொன்றை பெற்றுத்தரு வதாகவும், வன்னி மாவட் டத்திலுள்ள கிராமங்களின் அபிவிருத்தி திட்டங்களுக்கு தான் எப்பொழுதும் முழு மூச்சாக செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.(2-5-281)

# நல்லாட்சியிலும் திருடர்கள் அதிகளவில் உள்ளார்கள்

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு



தற்போதைய நல்லாட்சியிலும் திருடர்கள் அதிகம் இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள் பலர் தற்போதைய ஆட்சியில் இருப்பதாகவும் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காவிட்டால்தான் ஜனாதிபதியின் கால்களில் விழுந்து வணங்கி அரசாங்கத்தை விட்டு வெளியே வரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விட்டு வெளியேறி சுயாதீன உறுப்பினராக செயற படுவதற்கு பின்னிற்கப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரான தான் உள்ளிட்ட அனைவரும் கடந்த கால ஆட்சியில் தவறு இழைத்த அமைச்சர்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்து அவர்களுக்கு எதிராக எவ்வாறு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டோமோ, அதேபோல் தற்போதைய அமைச்சர்கள் தவறு இழைக்கும் போது அது தொடர்பில் பயமில்லாமல் கதைப்பதற்கு அனைவரும் முனவர வேண்டும் எனவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டு மக்கள் நல்லாட்சிக்காக வாக்களித்துள்ள போதும் அதற்காக செயற்படாவிட்டால் அதற்குள் இருந்து கொண்டு அமைச்சின் சலுகைகளை அனுபவிப்பது தவறு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பண்டாரநாயக்கவின் சிரார்த்த தினம்





அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சிரார்த்த தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹொரகொல்லையிலுள்ள அவரது சமாதியில் நினைவு கூரப்பட்ட போது பண்டாரநாயக்கவின் புதல்விகளான சந்திரிகா, சுனேத்ரா ஆகியோர் மலரஞ்சலி செலுத்துவதையும் கட்சியின் முக்கியஸ்தர்கள், குடும்பத்தினரைக காணலாம். (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ரோசா

Botanical Name-Rosa damascena
Family-Rosaceae
English-Rose Flower





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சிறுசெடி அல்லது பெருஞ்செடி வகைகளாகும். தனியிலை நிறைந்த மாற்றிலை அடுக்கம் கொண்டவை. முட்கள் நிறைந்த குத்துச் செடியாகும். தனிமலர் அல்லது சமமட்ட மஞ்சரி (Corymb) இருபாலான மலர்கள். ஆரைச்சமச்சீர் மலர் பெரும்பாலும் இடைமட்ட சூலகம் உடைய பூக்கள். மலர்கள் கோப்பை வடிவம், புல்லி இதழ்கள் ஐந்து இணையவில்லை. அல்லி இதழ்கள் ஐந்தும் பூந்தளத்தின் விளிம்பில் பொருந்திக் காணப்படும்.

பல மகரந்தங்கள் இணையவில்லை. மகரந்தப் பை இரு அறை, பூக்களின் நிறவேற்றுமையில் வெள்ளை, இளஞ்சிவப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வகைகள் உண்டு. ரோசா காடுகளிலும் வளருகிறது. காட்டு றோசா செடி நறுமணமுடையது அன்று.

தண்டுத்துண்டுகள் மூலமும் ஒட்டுமுறை மூலமும் இன விருத்தி செய்யலாம். இன்றும் இந்தியாவில் நறுமண எண்ணெய்க்காக ஆயிரம் உயர பகுதிகளில் மலர்கள் பயிரிடப்படுகின்றது.

இளஞ்சிவப்பு நிறப்பூக்களில் இதழ்களில் நல்ல வாசனையுடன் மருத்துவ குணமுடைய தைலச்சத்துக்களும் உள்ளன. சிவப்பு நிறம் தரும் பொருட்களுடன் அமிலங்களும் உள்ளன. குளுக்கோசைட் க்விர்திகிட்ரின் (Quercitin) முதலிய சத்துக்களும் இருக்கின்றன.

மேலும் காலிக்கமிலம், வாசனை தரும் தைலம் உள்ளன. பூவிதழ்கள் இலேசான துவர்ப்புச்சத்துள்ளது. புண்களை இது ஆற்றும். உடல் முழுவதும் பலம் தந்து இருதயம், நரம்பிற்கு வன்மை தரும்.

தொண்டைநோய்கள், சளி, இருமல், நாவறட்சி குணமாகும். இதில் உள்ள துவர்ப்புச்சத்து மாதவிடாய், கர்ப்பப்பை சம்பந்தமான நோய்களை குணமாக்கும்.

ரோசா பன்னீர்

ரோசா பூவிதழ்கள்-1500 கிராம், சுத்தமான நீர்-4200 மில்லி ஆகியன நிறைய எடுத்து 24 மணிநேரம் நீரில் பூவிதழ்களை ஊறவிட்டு வாலை இயந்திரத்தில் இட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கி கொள்ளவும். இதைக் கண்ணிற்கு சொட்டுமருந்தாக உபயோகிக்கலாம்.

5 தேக்கரண்டி அளவு பன்னீர் காலை, மாலை சாப்பிடலாம். இதனால் உடல் உஷ்ணம் தணியும். மயக்கம், கிறுகிறுப்பு, இருதய படபடப்பு நீங்கும். மூளையும் மனமும் சுறுசுறுப்பாக இயங்கும். பன்னீர் மிகுந்த நல்ல மணமுடையது. மருந்துக் கலிம்புகள் தயாரிப்பில் சேர்க்கும் பொருளாக பன்னீர் பயன்படுத்தப்படுகிறது.

உதட்டு வறட்சி, வெடிப்பு நீங்கி உதடு மென்மையாகவும் சிவப்பாகவும் வருவதற்கு

ஒலிவ் எண்ணெய் -2தேக்கரண்டி
சாதிக்காய்-2
தேன்மெழுகு-2கிராம்
பன்னீர்-2 தேக்கரண்டி

இவற்றில் தேன்மெழுகை உருக்கி ஒலிவ் எண்ணெய் மற்றும் பன்னீருடன் கலந்து கொள்ளவும். சாதிக்காயை தோல் நீக்கி பொடித்து அரித்து கலந்து கொள்ளவும். கிறீம்போல ஆகும்வரை தயாரித்து வைத்துக் கொள்ளவும். உதட்டில் பூசிவர உதடு வெடிப்பு, வறட்சி ஆகியன நீங்கி உதடு மென்மையாகவும் சிவப்பாகவும் வரும்.

உலர்ந்த றோசா பூவிதழ்கள், கடுக்காய் தோல் ஒரேயளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து மீண்டும் கலந்து அரித்து வைத்துக் கொள்ளவும்.

2-4 கிராம் அளவு இரவில் வெந்நீரில் சாப்பாட்டின் பின்பு எடுக்க மலக்கட்டு நீங்கி மலச்சிக்கலும் தீரும்.

பச்சைப்பயிறு-500கிராம்
வெந்தயம்-100 கிராம்
மஞ்சள்-50கிராம்
உலர்ந்த எலுமிச்சம்பழத் தோல்-50 கிராம்
உலர்ந்த ரோசா இதழ்கள்-100கிராம்

இலைகளை நன்றாக உலர்த்தி. பொடித்து குளியல் பொடியாக உடம்பில் பூசிக் குளித்தால் சொறி, சிரங்கு தோல் வறட்சி ஏற்படாது. தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

இதே குளியல் பொடியை முகத்திற்கு பூசி ஊறவிட்டு கழுவிவர முகம் பிரகாசமாகவும் சருமம் மிருதுவாகவும் அமையும்.

ஒருபங்கு ரோசா இதழ்களை மென்மையாக அரைத்து அதன் எடைக்கு 3பங்கு தூய தேன் கலந்து சாடியில் போட்டு தினசரி வெயிலில் சூரியஒளி படும்படி சில வாரங்கள் வைத்து எடுக்கவும்.

ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை சாப்பிட பித்த ரோகங்கள், வெள்ளை சாய்தல், உடல் உஷ்ணம், வயிற்றுப்புண் நீங்கி உடல்பலம் பெறுவதுடன் மலக்கட்டும் நீங்கும்.



ரோசா பூவிதழ்கள் 500 கிராம் எடுத்து 2லீற்றர் நீரிலிட்டுக் காய்ச்சி 400 மில்லியாக குடிநீர் ஆனதும் கசக்கி வடிகட்டி பிழியவும். அதில் 500கிராம் சீனியை பொடித்து கலந்து காய்ச்சி பாகுபதத்தில் இறக்கவும்.

10-60மில்லிவரை நீர் கலந்து அருந்தவும். உடல் ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும் இருதயத்தை பல மூட்டக் கூடியதுமான மென் பானமாகும்.

ரோசா பூவிதழ்கள் பச்சையாக 175 கிராம் சடமாஞ்சிக் 35 கிராம் இவை எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து அரைத்து பன்னீர் கலந்து பெரியவில்லையாகச் செய்து உலர்த்திக் கொள்ளவும்.

குளிக்கும் போது உடலில் தேய்த்துக் குளித்தால் தோல் வியாதிகள் ஏற்படாமல் தோலை மிருதுவாகவும் பாதுகாப்பாகவும் பேணமுடியும்.

ரோசாப்பூ எண்ணெய்

ரோசா இதழ்கள் 70கிராம் அளவு எடுத்து (Fresh) 500 மில்லி நல்லெண்ணெயில் கலந்து தினமும் வெயிலில் வைத்து எடுக்கவும். இவ்வாறு 15 நாட்கள் தினமும் வெயிலில் வைத்து எடுத்து வடித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும். உடம்பு வலிக்கு மசாஜ் எண்ணெயாக போட்டுத் தேய்க்கலாம்.

# வானமே இடிந்து விழுந்தாலும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்!



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த டி சில்வா மற்றும் ஏனைய நான்கு பேர்களுக்குமெதிராக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை அவரவர்க்கான தனிப்பட்ட தகுதி ஆளுமை என்ற பின்னணியில் பெரிதுபடுத்திப் பார்ப்பதிலும் பார்க்க அவர்கள் சம்பந்தப்பட்ட கொலை இடம்பெற்றிருந்த கால கட்டப் பின்னணியில் பார்ப்பதே அது பற்றிய சிறப்பான தெளிவினை ஏற்படுத்துவதாயிருக்கும்.

பாராளுமன்ற உறுப்பினரொருவரும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவருமான ஒரே கட்சியைச் சேர்




ந்த இரண்டு அரசியல் தலைவர்களும் ஜனசந்தடி மிக்க தெமட்டகொட வீதியில் பட்டப்பகல் வேளையில் பகிரங்கமாகவே மோதிக்கொண்டனர். இருவரும் ஆயுததாரிகளாக இருந்ததுடன் இருவரும் பரஸ்பரம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடுகளின் விளைவாக ஜனாதிபதி ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட துமிந்த சில்வா படுகாயமடைந்தார்.

இலங்கையில் இடம்பெறும் அரசியல் ரீதியான மோதல்களில் முன்னொருபோதும் நடைபெற்றிராத இச்சம்பவம் அமெரிக்க சிக்காகோ நகர அரசியல்வாதியும் கொலைகாரக் கும்பல் தலைவருமான அல் கெப்போன் என்பவரது காலத்து திடீர் அதிரடிச் சம்பவங்களையே கூடுதல் நினைவூட்டுவதாக இருக்கிறது. ஆனாலும் இலங்கையில் நிகழ்ந்த மேற்படி படுகொலைக்குக்

**வானமே இடிந்து வீழ்ந்தாலும்.... எனும் தலைப்பில் சண்டே லீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

காரணமாக அமைந்த அந்தக்கொலை வெறிமோதல் இடம்பெற்ற காலப் பகுதியில் சிக்காகோவின் காட்டுத்தனமான எதேச்சையானதுமான சட்டவிதிமுறைகளே இங்கும் நடைமுறையில் இருந்து வந்ததுடன் சிலவேளைகளில் அவற்றிலும் படுமோசமானவையாகவும் அவை இருந்திருக்கலாம்.

அச்சுறுத்துவது, கொலை அச்சுறுத்தல் விடுவது அல்லது அரசியல் எதிராளிகளை கொன்றொழித்து விடுவது போன்ற பாதகச் செயல்களை பழி- பாவமின்றி துணிந்தே செய்வதற்கான கட்டுப்பாடற்ற லைசென்ஸ் அனுமதியை அப்போது அதிகாரத்திலிருந்த அரசியல்வாதிகள் கொண்டிருந்ததாகவே தோன்றியது மட்டுமல்லாமல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகார சக்திகளது ஆதரவுங்கூட அவர்களுக்கு இருந்ததென்பது உயர் அதிகார பீடங்களில் நிர்ப்பந்தமான அறிவுறுத்தல்கள் இருந்ததையும் தெளிவுபடுத்துவதாகவேயுள்ளது.

பிரகடனப்படுத்தப்படாத பண-நிதி மூலங்களை ஓர் ஆசீர்வாதமாகவே பெற்றிருந்த புதிய செல்வந்த அரசியல்வாதிகளது மேலதிகார சக்திகள் தங்களைத் தாங்களே நாட்டின் ஒரு உயர்வர்க்க மாக உருவாக்கி எழுச்சி பெற்று வந்த அதே நேரம் மேற்படி புதிய பணக்காரர்களுக்கு கூடுதல் அரசியல் அதிகாரங்களையும் வழங்கியிருந்தனர். போதைப்பொருள், கடத்தல், சூதாட்டம் போன்றவை சட்டவிரோத செயற்பாடுகளாக கருதப்பட்ட காலம் போய் அவற்றுக்கு வர்த்தக ரீதியானவை போன்றவித அந்தஸ்து கிடைக்கப் பெற்றது. அரசியல் ரீதியான எதிர்ப்புகளுடன் அரசுக்குப் பாதகமான உண்மை நிலைபற்றி பத்திரிகைகளில் வெளிப்படுத்துவது போன்ற செயற்பாடுகளுக்கும் காரணமாயிருக்கக்கூடிய எவரும் அதிகார சக்தியின் வசதிக்கேற்ப காணாமறபோகச் செய்யப்பட்டனர். லசந்த விக்கிரமதுங்க கொலை, கடத்தப்பட்ட சிவராமினது உடல் தியவன்ன ஏரிக்கரைக்கருகில் வீசப்பட்டிருந்தமை மற்றும் பிரகீத் எக்னெலிகொட திடீரென காணாமற்போய் மறைந்துபோன நிகழ்வுகள், கடந்த காலத்தில் காணாமற்போகச் செய்யப்பட்ட பல பிரபல பத்திரிகையாளர்களுள் எடுத்துக்காட்டான மூவர்கள் பற்றியதாகும். கொலைகாரர்களைக் கண்டுபிடிப்பதற்கு தேவையான ஆதாரங்களான மறைக்கப்பட்ட தடயங்களை கண்டறிவதற்கென புதிய அரசானது தொடர்ந்தும் பெருமுயற்சி எடுத்தே வருகிறது. பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் தலைமையகப் பரிசோதகர்களுடன் பொலிஸ் உயர்மட்ட தலைமையதிகாரிபுங்கூட அவர்கள் சார்ந்த அரசியல் தலைமைகளினால் அவர்கள் செயற்பட வேண்டிய விதம்... வேறு என்னென்ன செய்ய வேண்டுமென்பது என்ற விதமான அறிவுறுத்தல்களின் அடிப்படையிலேயே செயற்பட்டிருந்தனர் என்ற விபரங்கள் இப்போதுதான் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் நீதிமன்ற செயற்பாடுகள் சார்ந்த நீதிபதி?... நீதியியல் சட்டங்களும் இதுமட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டது இதன் விசேட அம்சமாகும்.

உண்மையில் தெய்வீக அருள் தொடர்ந்தும் நிலவிய காரணத்தினால் எமது தீவக நாட்டில் சந்தர்ப்ப வசமாக உருவாகியிருந்த சூழ்நிலை அதிர்ஷ்டவசமாக அமைந்த காரணத்தினால் 2015 ஜனவரியில் இடம்பெற்ற தேர்தலொன்றின் மூலம் முன்னாள் அரசு பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு புதிய அரசாங்க மொன்று அதிகாரத்திற்கு வந்திருந்தது. அத்துடன் நாட்டின் இழிநிலையும் முடிவுக்கு வந்தது. அரசியல் வன்கலாசாரமொன்றாக உருவெடுத்திருந்த பலாத்காரமான கடத்தல்கள்- காணாமற் போதல்களுடன் அவைசம்பந்தமான வெள்ளைவான் நடவடிக்கைகளும் பெருமளவில் நின்று போயிற்று. அத்துடன் பத்திரிகையாளர்கள் தமது ஆக்கங்களை எழுதும்போதோ வீதிகளில் நடமாடும்போதோ அச்சத்துடன் கூடிய தமது பார்வையை அங்குமிங்கும் ஓடவிடவேண்டிய அன்றைய அன்றாட நிலை முற்றிலும் மாறிவிட்டிருந்தது. தற்போதைய நிலையில் நீதியென்பது இவ்விதம் தொடர்ந்தும் நிலைக்கட்டும்! என சிலர் இப்போதே கூறுவது கேட்கிறது. ஆனாலும் உண்மையில் நீதி நிலைநாட்டப்பட்டு விட்டதா?

நீதியென்ற தேரின் சக்கரங்கள் ஹல்ஸ்டோர்ஃப் குன்றின் (Hulfts dorp Hill) பாதை வழியாக ஈடாட்டத்துடன் தள்ளாடிய படி மிகுந்த சிரமத்துடன் மெதுவாக நகர்வதற்கு இப்போதுதான் ஆரம்பித்துள்ளது. நாட்டின் சுடர் விளக்குகளாக ஒளிரும் நீதி- சட்டம் சார்ந்த சட்டவியலாளர் போன்ற சத்தியவாதிகளாக கருதப்படத்தக்கோர் தொடர்ந்தும் கூறிக்கூறியே களைத்து அலுத்துப்போன நீதி பற்றிய பழமொழிகள் எல்லோரும் அறிந்ததே:

"தாமதிக்கப்படும் நீதியென்பது மறுக்கப்படும் நீதியே!" என்ற உண்மைதான் . அது உண்மையே தான் என்றாலும் அவசரமாக வழங்கப்படும் துரிதநீதி என்பது நாட்டின் இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட காலங்களில் சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் அவசரமாக வழங்கப்படும் கிளர்ச்சிக்கால தீவிரவாத தண்டனைத் தீர்ப்பு வழங்கல் முறைகளுக்கு (Sentences given by kangaroo courts) இட்டுச்சென்றுவிடக்கூடிய ஆபத்தை விளைவாக்கி விடவுங்கூடும். ஆனாலும் தற்போது நடைமுறையிலுள்ளது போன்ற மெதுவான நீதிவழங்கல் முறைகள் மூலம் நீதியானது பாதிக்கப்பட்டவரைச் சென்றடைவதற்கு நீண்ட காலதாமதமாகுவதால் உரியவரை நீதி கிட்டிச் சேர்வதற்குள் ஒரு வேளை காலமாகி அவரது தகனக்கிரியைகளே கூட முடிந்து போய் நீண்ட காலமாகிவிட வுங்கூடும்.

ஆகையால் இந்த விதத்தில் இழுத்தடிப்பிற்குள்ளாகும் நீதி வழங்கல் நடைமுறைகள் மூலம் அநேகமாக பாதிக்கப்பட்டவருக்கு அநீதியையும் பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு - குற்றவாளிக்கு ஆறுதலை வழங்குவதாகவுமே இருக்கும்.

உரோமைச்சட்டத்தில் உள்ளடங்கும் நீதி வழங்கல் பற்றிய லத்தீன் மொழி சட்டவிதியின் ஒரு பகுதியே (A part of the letin maxim) மேற்கூறப்படும் பழமொழியாகும். அச்சட்டவிதியின்படி நீதி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற அதன் முழு அர்த்தம், வானம் இடிந்து வீழ்ந்தாலும் நீதி நிலை நாட்டப்பட்டேயாகவேண்டும் என்ற அதன் பூரணத்துவம் காத்திரமானதேயாகும்.

தற்போதைய அரசாங்கத்திற்கு ஆதரவான அனுசரணையாளர்களது மனப்போக்கு'நல்லாட்சி என்ற படகினை நினைத்தவாறு தொடர்ந்தும் ஆட்டி அசைத்துக் கொண்டிருந்தால் அது மூழ்கிவிடுவதுடன் அனைத்து நன் முயற்சிகளும் இழக்கப்பட்டுவிடும்' என்ற கருத்தினையே வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இது சந்தேகத்திற்கிடமில்லாத விதத்தில் உண்மையேதானென்றாலும் தடுமாற்றம் இல்லாத வகையில் படகின் வேகமும் அதிகரிக்கப்படவேண்டியது அவசியமாகும். இருப்பினும் சட்டம் ஒழுங்கு நீதி சம்பந்தப்பட்ட பொலிஸார், சட்டவாளர், நீதியரசர் போன்ற பதவி நிலையிலுள்ளவர்களை இடம்மாற்றுவது புதிய நியமனங்களை மேற்கொள்வது போன்ற அங்கொன்றும் இங்கொன்றுமான சாதாரண செயற்பாடுகள்மூலம் நீதி வழங்கலை உருப்படியாக சாதித்து விடமுடியாது என்பதில் சந்தேகமில்லை. இலங்கையின் குற்றவியல் நீதி நடைமுறைச் சட்ட ஒழுங்கு என்பது உள்நாட்டு அரசியல் சமூக மாற்றங்களாலும் அரசியல் சித்து விளையாட்டுக்கள், சமயோசித தந்திரங்கள் போன்றவற்றாலும் பதம் பார்க்கப்பட்டு அதன் பாதிப்பால் உருவானதேயாகும். பொலிஸ் ஆட்சேர்ப்புக்கான பிரித்தானிய வழிமுறையான பண்பட்ட கௌரவமான குடும்பங்களிலிருந்தே தேர்ந்தெடுப்பது என்ற விதிமுறைகளெல்லாம் நீண்டகால ஓட்டத்தில் அடிபட்டுப் போயிற்று. நீதிமன்ற, நீதியியல் சட்ட சம்பந்தமான பதவிகளுக்குரிய தேர்வுகளில் கல்வியும் மொழிக் கொள்கையுமே இப்போது செல்வாக்குச் செலுத்தி வருகிறது. உத்தேசிக்கப்படும் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வருவதற்கு நீண்டகாலம் அல்லது வாழ்நாட்காலமே கூட தேவைப்படலாம். அடிமட்டத்திலிருந்து மேல் நோக்கி கட்டியெழுப்பப்படும் என்ற சீர்திருத்தமுமே வெகுவிரைவிலேயே ஆரம்பிக்கப்படுவதுடன் தேவைக்கேற்ப அங்குமிங்குமாக மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி மாற்றங்கள் மேல் மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படவேண்டியவையுமாகும். அரசியல் படுகொலைகளை விசாரிப்பதற்கான கூடுதல் விசேட நீதிமன்றங்கள் நடைமுறையில் இருந்துவரும் சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்படுவது பற்றி கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

அதேநேரம் லசந்த விக்கிரமதுங்க, வசீம் தாஜுடீன் படுகொலைகள் அல்லது பிரகீத் எக்னெலி கொட காணாமற்போகச் செய்யப்பட்டது போன்ற அரசியல் சாயம்படிந்த சம்பவங்களில் குறையற்ற நீதி பெற்றுக்கொடுப்பதே நல்லாட்சியின் நோக்கமாக இருக்குமானால் அவை சம்பந்தமான விசாரணைகளின் போது கொலைகளில் வெறுமனே நேரடியாக சம்பந்தப்பட்டவர்களை மட்டும் கண்டுபிடிப்பது போது மென்றாகி விடாது. படுகொலைகளுக்கு திட்டமிட்ட சூத்திரதாரி யார்?... கொலை நிறைவேற்றப்படுவதற்கு ஆணை பிறப்பித்தவர்?... கொலைக்கான காரணம் என்ன?... என்பது போன்ற கேள்விகளுக்கான விடைகளை தீர்க்கமானமுறையில் கண்டறிவ



தற்கான பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுவரையில் நீதி நிலை பெறமுடியாது.

இவ்வாறாக இதுமட்டிலான எமது ஆலோசனைகளை அரசாங்கத்திற்கும் சட்டம் , ஒழுங்கு மற்றும் நீதியியல் சம்பந்தமான எமது சகோதரத்துவ சமூகத்திற்கும் முன்வைத்து நீதி நிலை பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அதாவது வானமே இடிந்து வீழ்ந்தாலும் நீதி நிலைநாட்டப்பட்டேயாக வேண்டும்!-

**தமிழில்: யோகர்**

# சிரியாவில் வான் தாக்குதல் 85 பேர் கொன்று குவிப்பு

## ஐ.நா. உலக நாடுகள் கடும் கண்டனம்

(பெய்ரூட்)

**சிரியாவின் அலெப்போ நகரில் இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் 85 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தை ஐ.நா. மற்றும் உலக நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.**





உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டு உள்ள சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் படைகளுக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்யா வான்தாக்குதல்களை நடத்தி வந்தது.

கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த உள்நாட்டுப்போர் நடந்து வந்த நிலையில் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளின் தலையீட்டால் அங்கு போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டது.

இதனால் கடந்த சில மாதங்களாக ஜனாதிபதியின் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான சண்டை முடிவுக்கு வந்திருந்தது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை மீறி கடந்த 12 ஆம் திகதி முதல் அங்கு தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன. இது தொடர்பாக ரஷ்யாவும், அமெரிக்காவும் ஒன்றையொன்று குற்றம்சாட்டி வரும் நிலையில், அலெப்போ நகரில் அரசு படைகள் நடத்திய மிகப் பெரிய வான்தாக்குதல்களால் மக்கள் கடும் பீதியில் உறைந்துள்ளனர்.

சிரியாவின் வடபகுதியில் உள்ள முக்கிய நகரான அலெப்போவில் சுமார் 2 1/2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இந்த நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரச படைகள் திடீரென போர் விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்தன. குடியிருப்புப் பகுதிகள் மட்டுமின்றி வைத்தியசாலைகள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன.

அந்தவகையில் ஒரே நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட முறை வான்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. பல மணிநேரம் தொடர்ந்த இந்த வான்தாக்குதல்களில் அப்பாவி மக்கள் 85 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

300இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்களை மீட்கும் பணிகளில் தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

ஆனால் போர் விமானங்கள் தொடர்ந்து வானில் வட்டமிட்டபடியே இருந்ததால் மீட்புப்பணியில் தொய்வு ஏற்பட்டது. மேலும் வைத்திய சாலைகளில் மருந்துகள் மற்றும் இரத்தம் போன்றவை குறைவாக இருப்பதால் சிகிச்சை அளிப்பதிலும் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் வன்மையாக கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக நடந்த ஐ.நா. பாதுகாப்பு சபையில் அவசர கூட்டத்தில் பேசிய அவர், இந்த தாக்குதலால் தான் அதிர்ச்சியடைந்ததாகவும், இது காட்டுமிராண்டித்தனத்தின் உச்சம் என்றும் கூறினார். மக்கள் அடர்த்தி மிகுந்த பகுதியில் நடந்த இந்த தாக்குதல் ஒரு போர்க்குற்றம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சபையில் உரையாற்றிய அமெரிக்க தூதர் சமந்தா பவர், 'சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு பதிலாக ரஷ்யாவும், ஜனாதிபதி ஆசாத்தும் போரை நடத்தி வருகின்றனர். அங்கு ரஷ்யா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை அல்ல, மாறாக காட்டுமிராண்டித்தனம்' என்று கூறினார்.

முன்னதாக இந்த தாக்குதலை கண்டித்து ஐ.நாவுக்கான இங்கிலாந்து தூதர் மேத்யூ ரிகிராப்ட் மற்றும் அமெரிக்கா, பிரெஞ்சு தூதர்கள் பாதுகாப்பு சபையில் இருந்து வெளிநடப்பு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஹிலாரி - டிரம்ப் நேரடி விவாதம்

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 8 ஆம் திகதி நடக்கிறது. அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஹிலாரி கிளின்டன் (ஜனநாயக கட்சி), டொனால்டு டிரம்ப் (குடியரசுக் கட்சி) ஆகியோர் இடையேயான முதல் நேரடி விவாதம் நியூயோர்க்கில் உள்ள ஹோப்ஸ்ட்ரா பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.



அப்போது அவர்கள் இருவரும் வேலை வாய்ப்பு, ஈராக் போர் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளில் தங்களின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

இந்த விவாதம் காரசாரமாக நடந்தது. இந்த விவாதத்தை 10 கோடி மக்கள் பார்த்தனர். இது அமெரிக்க வரலாற்றில் மிக அதிகம் பேர் பார்த்த நிகழ்ச்சியாக கருதப்படுகிறது.

விவாதத்தில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப் பேசும் போது, "வேலை வாய்ப்புகள் நாட்டை விட்டு (அமெரிக்காவை விட்டு) செல்கின்றன. அதற்கு மிக குறைந்த அளவிலான வர்த்தகமே காரணம்" என குற்றம் சாட்டினார்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் பேசும் போது, 'நாட்டின் முதலீடு அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கிறேன்.

மேலும் நான் ஜனாதிபதி ஆனால் ஒரு கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப் படும்' என்றார்.

அமெரிக்க பொருளாதாரத்தை பற்றி பேசிய டிரம்ப், நாம் பெரிய அளவில் கொளுத்த நிலையில் அதே நேரம் வெறுமையான நிலையில் இருக்கிறோம். ஹிலாரி கிளின்டன் அனைத்தையும் பேசுகிறார். ஆனால் செயற்பாடு எதுவும் இல்லை.

உங்கள் (ஹிலாரி) வாழ்நாள் முழுவதையும் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் போரிட தயாரா? என கேட்கிறேன்.

அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்கர்கள் (கறுப்பர்கள்) நரகத்தை அனுபவிக்கின்றனர். ஏனெனில் அவர்களின் வாழ்க்கை அபாயகரமாக உள்ளது. கறுப்பின மக்களை பொலிஸ் சுட்டு கொல்கிறது என்றார்.

ஹிலாரி கிளின்டன் பேசும் போது, "டொனால்டு டிரம்ப் முறையாக வரி செலுத்தவில்லை. இராணுவத்துக்கும், இராணுவ மூத்த வீரர்களுக்கும், பாடசாலைகள் மற்றும் மக்களின் சுகாதார திட்டங்களுக்கு நிதி உதவி செய்ததில்லை.

டிரம்ப் இன வெறியாளர். அமெரிக்காவின் முதல் வம்சாவளி, கறுப்பின ஜனாதிபதி பராக் ஒபாமாவை பற்றி மனம் வருந்தும்படி பொய்யான தகவலை இவர் வெளியிட்டார்.

அவர் அமெரிக்காவில் பிறக்கவில்லை என்றார். பின்னர் 2 வாரங்களில் அதில் தனது நிலையை மாற்றிக் கொண்டார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினை பகிரங்கமாக பாராட்டி பேசினார். அது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதை சிறிதும் ஏற்க முடியாது. எனவே தலைமை பொறுப்புக்கு டொனால்டு டிரம்ப் தகுதியற்றவர்" என்றார். (இ-7)

## பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் இணைய இந்தியா முடிவு

### சீனா வரவேற்பு

பருவ நிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் சேரும் இந்தியாவின் முடிவிற்கு சீனா வரவேற்பு தெரிவித்துள்ளது.

கேரளமாநிலம் கோழிக்கோடு நகரில் நடைபெற்ற பா.ஜ.க.வின் தேசியக் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி, பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்துக்கு காந்தி பிறந்த நாளான எதிர் வரும் 2ஆம் திகதி இந்தியா ஒப்புதல் வழங்கும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பருவ நிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் சேரும் இந்தியாவின் முடிவிற்கு சீனா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் ஜெங்ஷ் வாங் செய்தியாளர்களிடம் கூறுகையில்.

பருவநிலை மாற்ற சவால்களை மனித சமுதாயம் சந்தித்து வருகிறது. இந்த நோய் எதிர்ப்பில் இருந்து எந்த நாடும் தப்பித்து இருக்க முடியாது. அதனால் அனைவரும் பருவநிலை மாற்றத்திற்கு எதிராக இணைந்து போராட வேண்டும்.

நிறைவேற்ற மற்றொரு உந்து சக்தியாக விளங்கும். ஒப்பந்தத்தை செயற்படுத்த இந்தியா உள்ளிட்ட அனைத்து தரப்பினருடன் சீனா இணைந்து செயற்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

## அரைநூற்றாண்டு கால போருக்கு முற்றுப்புள்ளி

### மக்களிடம் மன்னிப்புக் கோரிய கிளர்ச்சிக்குழு



அரை நூற்றாண்டு காலமாக தொடர்ந்த உள்நாட்டு போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கொலம்பிய அரசாங்கமும், ஃபார்க் கிளர்ச்சியாளர்களும் வரலாற்று ரீதியான உடன்பாட்டில் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திட்டனர்.

இதனை தொடர்ந்து முதன் முதலாக நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றிய கிளர்ச்சிக்குழு தலைவர், கடந்த கால யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரிடமும் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

மேலும், 52 ஆண்டுகளாக தொடர்ந்த போரினால் ஏற்படுத்தப்பட்ட வலிகளுக்கு என்னை இந்த நாட்டு மக்கள் மன்னித்தருள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

குறித்த உடன்பாட்டில் கைச்சாத்திடும் வரலாற்று நிகழ்வில் அனைவரும் சமாதானத்தை வெளிப்படுத்தும் வகையில் வெள்ளை நிற உடையணிந்து வருகை தந்திருந்தனர்.

கொலம்பியாவில் இடம்பெற்ற இறுதியான பாரிய பனிப்போரில் சுமார் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதுடன், 6 மில்லியன் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வளி மாசினால் ஆண்டுதோறும் 6.5 மில்லியன் உயிரிழப்புக்கள்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

**வளி மாசினால் உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் சுமார் ஆறரை மில்லியன் உயிரிழப்புக்கள் சம்பவிப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**

இவ்வாறாக உயிரிழப்புக்கள் சம்பவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர், வளி மாசை தடுக்க அதிரடி செயற்பாடுகளை முன்னெடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பத்தில் ஒருவரே காற்றின் தரம் குறித்து உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பான பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய ஒன்பது பேரும் மாசடைந்த காற்றையே சுவாசித்து வருகின்றனர்.

இவ்வாறாக வளி மாசினால் வருடாந்தம் 6.5 மில்லியன் உயிரிழப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த சுகாதார பிரச்சினையானது பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

எனவே இந்நிலைமையை உடனடியாக சீர்செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் காணப்படுகிறோம். எனவே உலக நாடுகள் வளிமாசை தடுக்கும் வகையிலான வழிமுறைகளை கையாள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## ஊரி தாக்குதல் சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தவும் பாகிஸ்தான் வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

ஊரி தாக்குதல் சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளது.

காஷ்மீரின் ஊரி இராணுவ முகாமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 வீரர்கள் உயிரிழந்தனர்.

எனவே பாகிஸ்தானை பயங்கரவாத நாடு என அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஊரி தாக்குதல் சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் பிரதமரின் வெளியுறவுத் துறை ஆலோசகர் சர்தாஜ்



அஜீஸ் தெரிவிக்கையில்,

ஊரி தாக்குதல் சம்பவம் குறித்து எந்த விசாரணையும் நடத்தாமல் பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம் சுமத்துகிறது.

இதுகுறித்த உண்மைகளை அறிந்து கொள்ள சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்.

பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம் சுமத்துவது இது முதல் முறையல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்திய பொருளாதாரம் போரினால் அழிவடையும் பாகிஸ்தான் எச்சரிக்கை

தற்போதைய சூழ்நிலையில் போர் நடந்தால் இந்திய பொருளாதாரம் அழியும் என பாகிஸ்தான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊரி இராணுவ முகாமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழ்நிலை உருவாகி உள்ளது. பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவில் எழுந்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் ஒரு பத்திரிகையில் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதில் தற்போதைய சூழ்நிலையில் போர் தேவையில்லை. எங்களுக்கும் (பாகிஸ்தானுக்கும்) அந்த எண்ணம் இல்லை. அதே நேரத்தில் போர் நடந்தால் இந்திய பொருளாதாரம் அழியும் நிலை ஏற்படும் என்று கூறியுள்ளனர். (இ-7)

## பாகிஸ்தான் தன்னைத்தானே சுய பரிசோதனை செய்யவும்

### நவாஸ் ஷெரீப்புக்கு இந்தியா பதிலடி

(நியூயோர்க்)

பலுசிஸ்தான் மக்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிடும் பாகிஸ்தான், தன்னைத்தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் இந்தியா பதிலடி கொடுத்தது.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், காஷ்மீரில் இந்தியா மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அதற்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இதுதொடர்பாக ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவிக்கையில்,

ஏனைய நாடுகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சுமத்துபவர்கள், தங்களை தாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். தங்கள் நாட்டில் உள்ள பலுசிஸ்தானில் எத்தகைய அதிர்ச்சிகரமான தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளோம் என்று பார்க்க வேண்டும். பலுசிஸ்தான் மக்கள் மீதான கொடூர தாக்குதல்கள், அரசாங்க அடக்குமுறையின் மோசமான வடிவங்களாக உள்ளன.

இன்று நம்மிடையே உள்ள சில நாடுகள், பயங்கரவாத மொழியை பேசுகின்றன. பயங்கரவாதத்தை பேணி பாதுகாக்கின்றன. ஏற்றுமதி செய்கின்றன. பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பது அவர்களின் வாடிக்கையாகி விட்டது. அத்தகைய நாடுகளை நாம் அடையாளம் கண்டறிந்து, அவர்களின் தவறுகளுக்கு பொறுப்பேற்க செய்ய வேண்டும். அவர்களுக்கு நாடுகளின் கூட்டமைப்பில் இடம் அளிக்கக்கூடாது.

ஐ.நாவால் 'பயங்கரவாதி' என அறிவிக்கப்பட்டவர்கள்,



இந்த நாடுகளில் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். ஊர்வலம் நடத்துகிறார்கள். தங்கள் நச்சுக்கருத்துகளை போதித்து வருகிறார்கள். அந்த பயங்கரவாதிகளைப் போலவே, அவர்களுக்கு புகலிடம் அளிக்கும் நாடுகளும் குற்றவாளிகள் தான்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. காஷ்மீரை பெறவேண்டும் என்று கனவு காண்பதை பாகிஸ்தான் கைவிட வேண்டும். இவ்வாறு சுஷ்மா சுவராஜ் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாகிஸ்தானை ஆதரிப்பதாக வாக்குறுதி அளிக்கவில்லை

### சீனா திடீர் பல்டி

(பீஜிங்)

"இந்தியாவுடன் போர் ஏற்பட்டால், பாகிஸ்தானை ஆதரிப்பதாக, நாங்கள் வாக்குறுதி அளிக்கவில்லை" என, சீனா, திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானை ஆதரிப்பதாகவும், அந்த நாட்டின் மீது போர் தொடுக்கப்பட்டால், சீனா, பாகிஸ்தான் பக்கம் நிற்கும் என்றும் சீன தூதர் கூறியதாக பாகிஸ்தான் ஊடகங்கள், அண்மையில் தகவல் வெளியிட்டன.

இதை சீனா மறுத்துள்ளது. இது தொடர்பாக, சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர், கெங் சுவாங் கூறியதாவது,

காஷ்மீர் விவகாரத்தில், பாகிஸ்தானுக்கு ஆதரவு அளிப்பதாக, சீன அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை.

காஷ்மீர் விடயத்தில், சீனாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது.

இந்த பிரச்சினைக்கு, இரு தரப்பும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.



இந்தியாவும், பாகிஸ்தானும் எங்கள் அண்டை நாடுகள் என்பதுடன், நல்ல நட்பு நாடுகளும்கூட. இந்த இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டு, தெற்காசிய வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பங்களாதேஷில் இறந்ததாக புதைக்கப்பட்ட குழந்தை உயிர் பிழைத்தது

(டாக்கா)

பங்களாதேஷில் இறந்ததாக புதைக்கப்பட்ட குழந்தை திடீரென அழுது உயிர் பிழைத்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பங்களாதேஷத்தின் டாக்கா பகுதியைச் சேர்ந்தவர் நஜ்முல்ஹுடா. இவருக்கு கலிபா ஹுயத் என்ற மனைவி உள்ளார்.

பிரசவத்தின் போது கலிபாவுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

ஆனால் வைத்தியர்கள் குழந்தை பிறக்கும் போதே இறந்து விட்டதாக கூறினர். இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் குழந்தையின் சடலத்தை புதைப்பதற்கு முடிவு செய்தனர்.

புதைப்பதற்காக குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து புதைத்துள்ளனர். புதைத்த சில மணித்துளிகளில் குழந்தையின் அழுகுரல் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து கேட்டுள்ளது.

இதனால் புதைக்கப்பட்ட இடத்தில் மீண்டும் தோண்டிய போது குழந்தை உயிருடன் இருப்பது தெரியவந்தது.

அதை தொடர்ந்து அவர்கள் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். (இ-7)

## முதிர்ச்சியான தோற்றத்துடன் பிறந்த ஆண் குழந்தை

பங்களாதேஷில் முதிர்ச்சியான தோற்றதுடன் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளமையானது அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷ் மாகுரா மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

முதிர்வு தோற்றதுடன் பிறந்த அந்த குழந்தை காண்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

குழந்தையின் முகம், கண்கள் மற்றும் சுருங்கிய தோல் என உடலின் பாகங்கள் முதிர்ச்சியான தோற்றத்துடன் காணப்படுகிறது. 'முதிராமுதுமை' என்ற குறைபாட்டுடன் பிறந்த அந்த குழந்தை இயல்பான வளர்ச்சியை விட 8 மடங்கு வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நாய்களுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல்




## நீர்வெறுப்பு நோய் மரணத்தைஏற்படுத்தக்கூடியது

நாய்களுக்கும் மனிதனுக்குமான மோதல் யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதலை விடப் பாரிய பொருளாதாரச் சேதத்தினை விளைவிக்கின்றது. சனத்தொகைப் பெருக்கமும் நகரமயமாக்கலும் செயற்கைச் சூழலை மனிதனின் வாழ்விடமாக மாற்ற வைத்துள்ளது. இதனால் இயற்கையாக வாழ்ந்த நாய்களும் மனிதனுடன் இணைந்து வீதிகளில் வாழ வேண்டிய சூழலும் நாய்கள் வாழும் சூழலில் அமைக்கப்படும் வீதிகளும் நாய்களை தெருவோர வாசிகளாக மாற்றுகின்றது. மனிதனின் முறையற்ற திண்மக் கழிவு முகாமைத்துவம், வீதிகளில் நாய்களை உணவுக்காக ஏங்க வைக்கின்றது. இந்நிலையில் வீதியில் குறிப்பாக அகாலவேளையில் செல்லும் பாதசாரிகள், துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர், உந்துருளியில் செல்வோர் நாயினால் கடிபடவும் நாய் குறுக்கே போய் விபத்துக்கள் ஏற்படவும் ஏதுவாகின்றது. நாய்-மனித மோதல்களில் நாய்களும் அடிபட்டுச் சாகின்றன. மனிதனும் அடிபட்டுச் சாவதுடன் கடிபட்டும் சாகின்றான்.

நாய்களினால் மனிதன் கடிபடுவதையும் அடிபடுவதையும் கட்டுப்படுத்த எமது சூழலில் உள்ள நாய்களை நாம் வகைப்படுத்த வேண்டும்.

அவையாவன,

வளர்ப்பு நாய் Pet Dog,
கட்டாக்காலி நாய் Stray Dog ,
கட்டாக்காலி வளர்ப்பு நாய் Stray Pet Dog,
வளர்ப்பு நாய் கட்டாக்காலியாக இருத்தல் Pet Stray Dog,
அநாதரவான நாய் Retugee Dog.

வளர்ப்பு நாய்கள் என்பது முறையாகத் தடுப்பூசி போட்டு வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களைக் குறிக்கும். கட்டாக்காலி நாய்கள் என்பது உரிமையாளர்கள் இல்லாது பொது இடங்களில் வாழும் நாய்கள். கட்டாக்காலி, வளர்ப்பு நாய்கள் என்பது வீடுகளில் வளர்க்கப்பட்டாலும் தெருக்களில் அலைந்து திரியும் நாய்கள். வளர்ப்பு நாய் கட்டாக்காலியாக இருத்தல் என்பது பொதுமக்கள் தினமும் குறித்த நாய்களுக்கு பொது இடங்களில் தமது கழிவுகளை உணவாக கொடுக்கும் இடங்களில் வளரும் நாய்களாகும். அநாதரவான நாய்கள் என்பது நாயின் உரிமையாளர் இறந்து, புலம்பெயர்ந்து, இடம்பெயர்ந்து, கைவிடப்பட்ட நாய்களாகும்.

நாய்களுக்கும் மனிதருக்கும் இடையிலான மோதலைத் தவிர்க்க நாய்களை இவ்வாறு வகைப்படுத்தி அணுகல் வேண்டும். வெறுமனே நாய்களைப் பிடித்துக் கொல்லுங்கள் என்று கூறாமல் நாய்களை வளர்ப்போர் தமது நாய்களினால் ஏனையவர்களுக்கு இடையூறு விளையாது முற்காப்புகளை எடுக்க வேண்டும். மேலும் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடைமுறையும் உருவாக்கப்படல் வேண்டும். யாழ்.போதனா வைத்தியசாலையில் தினமும் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மக்களும் உள்ளூராட்சி மன்றங்களும் முறையாகப் பேணல் வேண்டும். உதாரணமாக கஸ்தூரியார் வீதியில் இரவு 9 மணிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றால் மாதா கோயிலடியில் தெருவோரக் கழிவுகளை ஆராயும் கட்டாக்காலி, வளர்ப்பு நாய்கள் இரண்டு வலது காலைப் பதம் பார்க்க பாயும். அதில் தப்பி சற்றே சென்றால் பிள்ளையார் கோயிலடியில் நான்கு கட்டாக்காலி, வளர்ப்பு நாய்கள் வரவேற்கும். விபத்துக்கள் ஏற்படுவதற்கும் நாயினால் கடிபடுவதற்கும் முறையற்ற திண்மக் கழிவு முகாமைத்துவம் ஒரு காரணம்.

உலக நீர்வெறுப்பு விழிப்பு தினமான புரட்டாதி 28 ஆம் திகதி 2016 இன் தொனிப் பொருள் விழிப்படைவோம். தடுப்பூசியினை நாய்களுக்கு ஏற்றுவோம். விலங்கின் விசர் நோயினை இல்லாது செய்வோம் என்பதாகும். இலங்கையில் 2020 ஆம் ஆண்டளவில் விலங்கின் விசர் நோயினை இல்லாது செய்யத் திடசங்கற்பம் உள்ளது. அதனை முன்னிறுத்தி நாம் விழிப்பினை மேற்கொள்வோம்.

மருத்துவர்
சி.யமுனாநந்தா

# வீடுகளில் நாய் வளர்ப்புக்கு தேசிய கொள்கை வகுப்பு

## அமைச்சரவை அங்கீகாரம்



வீடுகளில் நாய்களை வளர்ப்பதாயின் அது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அடங்கிய தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்குத் தடுப்பு மருந்துகள் வழங்கி உரிய முறையில் பராமரிக்கப்பட்டால் சமூகப் பிரச்சினையாக மாறி இருக்கும் நீர் வெறுப்பு நோயை (விஷர் நாய்க்கடி நோய்) இந்நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

2030 ஆம் ஆண்டாகும் போது நீர் வெறுப்பு நோயை உலகில் முழுமையாகக் கட்டுப்படுத்துவதை உலக சுகாதார ஸ்தாபனம் இலக்காகக் கொண்டுள்ள போதிலும் நாம் இலங்கையில் 2020 ஆம் ஆண்டாகும் போது இந்நோயை முற்றாகக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலக நீர்வெறுப்பு தினத்தையொட்டி சுகாதார கல்வி பணியகத்தில் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட செய்தியாளர் மாநாட்டிற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வருடாவருடம் செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி உலக நீர் வெறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனூடாக இந்நோய் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் எற்படுத்துவதற்கும் அதனூடாக இந்நோயை மக்கள் தவிர்ந்து கொள்வதற்கான நிலைமையை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்றாலும் சுகாதார அமைச்சு நீர் வெறுப்பு நோய்க்கான சிகிச்சைகளுக்காக வருடமொன்றுக்கு 600 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்கின்றது. நாட்டிலுள்ள எல்லா பிரதான வைத்தியசாலைகளிலும், மாவட்ட மட்ட வைத்தியசாலைகளிலும் குறிப்பாக சுமார் 250 வைத்தியசாலைகளில் இத்தடுப்பு மருந்து வழங்கப்படுகின்றது.

இருந்த போதிலும் நீர் வெறுப்பு நோயின் பாதிப்பின் தாக்கத்தையும் அதன் குரூரத்தன்மையையும் அறிந்து கொள்ளாதவர்கள் நாய்க்கடிக்கு உள்ளானால் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

சிலர் நாய்க்குட்டி கடித்தாலோ, அவை சுரண்டுவதால் ஏற்படும் கீறல் காயங்களாலோ பாதிப்புக்கள் ஏற்படாது என கருதுகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறான அபிப்பிராயம். மாறாக எந்த நாய் கடித்தாலும், அவை நகங்களினால் சுரண்டினாலும் தாமதமின்றி அரசாங்க வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அவை உயிராபத்தைக் கூட ஏற்படுத்த முடியும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் 1977 ஆம் ஆண்டில் நீர் வெறுப்பு நோய் காரணமாக 377 பேர் உயிரிழந்தனர்.

அது இவ்வருடத்தில் ஜனவரி முதல் செப்டெம்பர் மாதம் வரையும் 16 வரை குறைவடைந்துள்ளது. என்றாலும் 2020 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் நீர் வெறுப்புநோயை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# ஏழாவது நாளாகவும் தொடர்ந்தது தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதம்

(கொழும்பு)

**அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 21 பேரது உண்ணாவிரதப் போராட்டம் ஏழாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.**

தமிழ் அரசியல் கைதிகள் 21 பேரும் கடந்த 21ஆம் திகதி தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் தமிழ் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வாரம் கடக்கின்ற போதிலும் இதுவரை அரசாங்கத்திடம் இருந்து பதில் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### மகிந்தவால் நாட்டுக்கு ஏற்பட்ட

# கடனை தீர்க்கவே தனியார் அரசு கூட்டிணைந்த வணிக முயற்சி

### நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டிற்கு ஏற்படுத்தப்பட்ட பாரிய கடன்சுமையிலிருந்து மீண்டெழுவதற்காகவே அரச தனியார் கூட்டிணைந்த பொருளாதார சூழ்நிலையை உருவாக்கவிருப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2017ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அரச தனியார் கூட்டிணைந்த பொருளாதார சூழலுக்கான அடித்தளத்தை அடுத்த வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக உருவாக்கிக் கொடுக்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

அரச தனியார் ஒத்துழைப்பு தொடர்பாக ஆராயும் தேசிய மாநாடு அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் அமெரிக்கத் தூதரக உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதியமைச்சர், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்க நாட்டின் நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இலங்கையின் முதலீட்டுச் சந்தை திறந்துவிடப்பட்டிருப்பதாக அழைப்பொன்றையும் விடுத்தார்.

"கடந்த ஜனவரி 2015 ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கத்திற்கு நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கான கடப்பாடு உண்டு. அந்த வகையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் ஐக்கிய அமெரிக்காவும் ஐ.நா. சபையும் உலக வங்கியும் உதவி செய்வதற்கு முன்வந்துள்ளன. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாக ஸ்திரமற்ற தன்மையுடன் நாட்டை வழி நடத்தியுள்ளது. இதனால் நாட்டின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து செல்ல வேண்டிய கடப்பாடு தற்போது உருவாகியுள்ள அரசாங்கத்திற்கு இருக்கின்றது. கடந்த பல வருடங்களாக அமெரிக்கா பல பொருளாதார உதவிகளை செய்து வருகிறது. இதனடிப்படையில் எமக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நல்லுறவு பேணப்பட்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக குறைந்த கால அவகாசத்தில் அரச மற்றும் தனியார் இயங்குமுறை தொழில்நுட்பத்தை அமெரிக்காவின் உதவியுடன் அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் இணைந்து முன்னெடுக்கும் பல திட்டங்களை எதிர்வரும் காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தனியார் முதலீடுகளை அனுமதிப்பதன் மூலம் குறைந்த காலத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதுடன் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்திய மாகாணசபை உறுப்பினர்களின் ரஷ்ய பயணத்தை நிறுத்தினார் ஜனாதிபதி



மத்திய மாகாணசபை உறுப்பினர்களின் ரஷ்ய பயணத்தை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். மத்திய மாகாண சபை உறுப்பினர்களும் அதிகாரிகளும் ரஷ்யாவிற்கு பயணம் செய்வது குறித்து ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டுள்ளார். இதனால், மத்திய மாகாண சபையின் இரண்டாம் குழுவினரது ரஷ்யாவுக்கான பயணத்தை இடைநிறுத்துமாறு மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்கவிற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களின் பணம் இவ்வாறு பாரியளவில் விரயம் செய்யப்படும் பயணங்கள் தொடர்பில் தாம் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அறிவிக்கப்பட வேண்டும் எனவும் ஏன் தமக்கு இது பற்றி அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரண்டு குழுக்களாக மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் ரஷ்யாவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தனர். இதில் 29 பேரைக் கொண்ட ஓர் குழு நேற்று முன்தினம் அதிகாலை ரஷ்யா நோக்கிப் பயணமாகியுள்ளது. மற்றுமொரு குழு எதிர்வரும் 5 ஆம் திகதி ரஷ்யாவிற்கு புறப்பட்டுச் செல்லவிருந்தது என மத்திய மாகாண ஆளுநர் நிலுகா தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் தமக்கு அறிவிக்காமல் அனுமதியளிக்க வேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உபசரிப்பு என்று உபத்திரவம் தரலாமா?

எத்தனையோ சந்தர்ப்பங்களில் எனக்கு நண்பர்களையும் உறவினர்களையும் தேடி வர பார்க்கத்தோன்றும்." அட இவ்வளவு தூரம் வந்து விட்டோம். இங்கிருந்து பக்கம் தானே நம்ம சித்தப்பா வீடு அல்லது நண்பர் சௌந்தர் வீடு-பார்த்து விட்டுப் போய்விடுவோமே" என்கிற ஆவல் ஏற்படும்.

சரி என்று முடிவு செய்வதற்குள் ஒரு கேள்விக் கொக்கி வந்து என் சட்டைக் கொலரைப் பிடித்து "வேண்டாம் போகாதே" என்று இழுத்துத் தடுத்து நிறுத்தும்.

அந்தக் கேள்விக் கொக்கி எழக்காரணம் வேறு ஒன்றுமில்லை. தேநீரையும் கண்டதையும் கலந்து தந்து ஆளைப் பிடித்து மரத்திலேற்றி இளநீரைச் சீவச் சொல்லி அதோடு விடாமல் "இருந்து சாப்பிட்டுத்தான் போகணும்" என்று உரிமை விலங்கைக் கொண்டு காலைக் கட்டிப்போட்டு விடுவார்களே என்கிற பயம்தான் வேறென்ன?

என் சகோதரன், சகோதரி திருமணத்திற்குத் தெரிந்த உறவு வட்டத்தில் ஒருநாளைக்கு 50 பேரை அழைக்க வேண்டும் என்று திட்டமிட்டுப் புறப்பட்டதில் எந்த எந்த வீட்டிலும் தப்பிக்க முடியாமல் 4 ஓவல் 2 காம்ப்ளான் 1 போர்ன்விட்டா,7 சர்பத்,4 இளநீர்,2 ரசனா என்று 19வது வீட்டை அழைப்பதற்குள் வயிறு பயங்கரமாக ஆகி என்னென்னவோ செய்ய ஆரம்பித்துவிட்டது. வீட்டுக்குத் திரும்பிவிடு என்று வயிறு கெஞ்சும். யாராவது என்ன "சாப்பிடுறீங்க?" என்று கேட்டாலே "தூக்குக் கயிற்றை மாட்டிக்கிறீங்களா?" என்று கேட்பது போலவே இருக்கும். அலறி ஓடத்தோன்றும்.

ஏன் இவர்களுக்கு இந்த அடிப்படையான விடயத்தைப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை என்று மனம் சபிக்கும்.

மிக ஆபூர்வமாக "ஐயையோ! ஒண்ணும் வேணாங்க வயிறு குப்பைத் தொட்டியாப் போச்சு" என்று நான் சொல்ல சரி என்று என்னை விட்டுவிடுகிறவர்களின் காலில் சாஷ்டாங்கமாக விழலாமே என்கிற அளவுக்கு மனம் வாழ்த்தும்.

உதட்டளவு உபசாரம் செய்ய வேண்டாம் தான். ஆனால் உண்மையாக நடந்துகொள்கிறேன். பேர்வழி என்று உபத்திரவம் தரலாகாது.

உபசாரம் என்கிற பெயரால் மற்றவர்களைத் தங்கள் வீட்டிற்கு வரவிடாமல் செய்துவிடுகிற ஆட்களே அதிகம். அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்த உபசரிப்பைத் தவிரவும் வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன என்பதை இவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

வீட்டுக்கு வந்தவர்களோடு நன்கு பேசிக் கொண்டிருப்போம் என்று அவர்களின் அவசரம் தெரியாமல் நடந்துகொள்கிறவர்களும் மகாமகாக் கட்டாயத்தைத் திணித்து இன்னும் இரண்டு நாட்கள் தங்கிட்டுப் போங்க என்பவர்களும் உபத்திரவக்காரர்களே!

இன்னும் சாப்பிடுங்க என்று இலையில் சட்டியைக் கவிழ்த்து உணவை வீணாக்கி வயிற்றைக் கெடுப்பவர்களும் உபத்திரவாதிகளே!

உபத்திரவம் தராத உபசரிப்பே உண்மையான உபசரிப்பு. இதை உணராதவர்களுக்கு காலத்தோடு ஒத்துப்போகாத கிறுக்கு என்ற பட்டமே மிஞ்சும். நாம் கொஞ்சம் இந்தப் பரபரப்பான உலகத்தின் நடைமுறைக்கு ஏற்றபடி நடந்து கொள்வோமா?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## சிங்கம் – அசிங்கம்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதனுடைய மனைவி நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டது. அதனால் அது மிகவும் கவலையுடன் காணப்பட்டது. சிங்கத்திடம் நரி, புலி, கரடி, சிறுத்தை போன்ற மிருகங்கள் வந்து துக்கம் விசாரித்து சென்றன. சிங்கம் முன் போல் காட்டில் அதிகமாக நடமாடாமல் தன்னுடைய உணவிற்காக மட்டும் வெளியே செல்லும். மற்றபடி தன்னுடைய குகையிலேயே இருக்கும். எப்பொழுதும் அது தன்னுடைய மனைவியைப் பற்றியே நினைத்துக் கொண்டது.

இப்படியே நாட்கள் பல ஆகிவிட்டன.

சிங்கத்தின் நடமாட்டம் அதிகமாக இல்லாததால் ஒருநாள் புலியும், நரியும் சிங்கத்தை காணச் சென்றன. சிங்கம் மிகவும் சோர்ந்து போய் வேட்டைக்கு கூடச் செல்லாமல் கண்ணீருடன் காணப்பட்டது.

புலியும், நரியும் சிங்கத்திடம், “இன்னும் அழுது கொண்டிருந்தால் என்ன பயன் அதனால் மனதை திடப்படுத்திக் கொண்டு



வாழ பழகி கொள்ள வேண்டும்” என்றன.

அதற்கு சிங்கம் என்னுடைய மனைவி இல்லாமல் என்னுடைய பலம் அனைத்தையும் நான் இழந்து விட்டேன். என்னுடைய மனைவி தான் நான் வேட்டைக்குச் செல்லும் போது உற்சாகமும், ஊக்கமும் கொடுத்து வழியனுப்புவாள். அதனால் அவள் இல்லாமல் எனக்கு வேட்டைக்கு செல்ல மனமே இல்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை என்றது. புலியும், நரியும் சிங்கத்திடம சிறிது நேரம் பேசி விட்டு குகையை விட்டு வெளியே வந்து தங்களுடைய இருப்பிடம் நோக்கிச் சென்றன.

நரி தன்னுடைய இருப்பிடத்திற்கு செல்லும் வழியில் கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்களைச் சந்தித்தது. நரி அந்த மிருகங்களிடம் சிங்கம் அது தன்னுடைய முழு பலத்தையும் இழந்து விட்டது என்று அதன் வாயாலேயே சொன்னது என்றும் வேண்டுமானால் புலியிடம் கேட்டுப் பாருங்கள் என்றது.

புலியும் தற்செயலாக அவ்வழியே வந்தது. கரடி, சிறுத்தை, ஓநாய் ஆகியோர் புலியிடம் நரி சொல்வது உண்மையா என்று கேட்டன.

புலியும் அதற்கு ஆமாம் தானும் நரியும் சிங்கத்தை சந்திப்பதற்காக சென்ற போது சிங்கம் அதன் வாயாலேயே தன்னுடைய மனைவி இறந்த பின் தன்னுடைய பலம் அனைத்தையும் இழந்து விட்டதாக சொன்னது என்று புலி மற்ற மிருகங்களிடம் கூறியது.

இதைக் கேட்ட உடன் மற்ற மிருகங்களுக்கு ஆசசரியம் தாங்க முடியவில்லை. ஏனென்றால் சிங்கத்தின் பலத்தை வைத்து தான் காட்டில் உள்ள மற்ற மிருகங்கள் அதற்கு பயந்து மரியாதை கொடுத்தன. ஆனால் சிங்கமே தன்னுடைய பலம் அனைத்தையும் தான் இழந்து விட்டதாக ஒப்புக் கொண்டதால் தாங்கள் இனி சிங்கத்திற்கு பயப்பட வேண்டாம் என்று புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலான மிருகங்கள் தங்களுக்குள் பேசி முடிவெடுத்தன.

நான்கு நாட்கள் கழித்து புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் சிங்கம் அதன் குகைக்கு செல்லும் வழியில் உள்ள ஒரு மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தன.

(தொடரும்...)

## 28.09.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 48 - எகிப்திய மன்னன் தலமியின் ஆணையை அடுத்து மாவீரன் பாம்பீ படுகொலை செய்யப்பட்டான்.
- 1066 - முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.
- 1448 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.
- 1687 - கிரேக்கத்தின் பழங்காலக் கட்டிடம் பார்த்தினன் குண்டுவெடிப்பில் சேதமடைந்தது.
- 1791 - பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத்தளையில் இருந்து விடுவித்த முதலாவது நாடானது.
- 1795 - யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றினர்.
- 1867 - டொரோண்டோ ஒண்டாரியோவின் தலைநகரமாகியது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப்பற்றியது.
- 1895 - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டிடம் கட்டப்பட்டது.
- 1928 - அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலினைக் கண்டுபிடித்தார்.
- 1939 - நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்கு போட உடன்பட்டன.
- 1939 - இரண்டாம் உலகப்போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1950 - இந்தோனேசியா ஐநாவில் இணைந்தது.
- 1958 - பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1960 - மாலி, செனெகல் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் இணைந்தன.
- 1961 - டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது
- 1993 - புலோப்பளைச் சமர்: கிளாலிப் பாதையை மூடும் இலக்குக் கொண்ட "யாழ் தேவி இராணுவ நடவடிக்கை" விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.
- 1994 - பால்டிக் கடலில் சுவீடன் சென்று கொண்டிருந்த எஸ்தோனியப் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 852 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - பொப் டெனார்ட் மற்றும் சில கூலிப் படைகள் கொமரோஸ் தீவுகளைக் கைப்பறறினர்.
- 2005 - ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தது.

### பிறப்புக்கள்

- கிமு 551 - கன்ஃபூசியஸ், சீனப் பகுத்தறிவாளர் (இ. கிமு 479)
- 1852 - ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் . (இ. 1907)
- 1929 - லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி.
- 1934 - பிரிஜிட் பார்டோ, பிரெஞ்சு நடிகை, பாடகி.
- 1947 - ஷேக் ஹசீனா, வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமர்.
- 1982 - அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்.
- 1982 - எமெக்கா ஓகஃபோர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள

- 1895 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர். (பி. 1822)
- 1953 - எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் . (பி. 1889)
- 1956 - வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி . (பி. 1881)
- 1970 - கமால் அப்துல் நாசர், எகிப்திய அதிபர் (பி. 1918)
- 1978 - பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர். (பி. 1912)
- 1989 - பேர்டினணட் மார்க்கொஸ், பிலிப்பீன்ஸ் அதிபர். (பி. 1917)
- 1994 - கே. ஏ. தங்கவேலு, தமிழ் நகைச்சுவை நடிகர்.

### சிறப்பு நாள்

- உலக வெறிநோய் நாள்.
- தாய்வான் - ஆசிரியர் நாள் .(கன்பூசியஸ் பிறந்த நாள்)
- பசுமை நுகர்வோர் நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 100 |
| தக்காளி | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 120 | 100 |
| பூசணி | 50 | 40 | 60 | 30 |
| புடோல் | 40 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 80 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 150 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 400 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 25-35 | 50 |
| இராசவள்ளி | – | – | – | 160 |
| வெங்காயப்பூ | 80 | 120 | 160 | 160 |
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | – | 80 | – |

# செக் குடியரசு ஜனாதிபதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

செக் குடியரசின் ஜனாதிபதி மிலோஸ் செமன் ,வெளியுறவு அமைச்சர் லுபோமீர் சரோலெக் ஆகியோர் அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இருவேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வார்கள் என அந்நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் ஆரம்பமாகி 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டும் இலங்கையின் வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்குடனுமே இவர்கள் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். குறித்த விஜயத்தை தொடர்ந்து செக் குடியரசின் ஜனாதிபதி கொலம்பியா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவ் உத்தியோகபூர்வ விஜயங்கள் இரு நாடுகளுக்குமிடையே சமூக, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாக கருதப்படுவதோடு இவை வரலாற்று சிறப்பம்சமிக்க விஜயமாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# தகவல் ஆணைக்குழுவை நிறுவுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**தகவல் ஆணைக்குழுவினை நிறுவுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடக அமைச்சிற்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**



இதன்படி இன்னும் சில தினங்களில் தகவல் ஆணைக்குழு அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என பிரதி ஊடக அமைச்சர் கருணாசேன பரணவிதாரண தெரிவித்துள்ளார்.

தகவல் ஆணைக்குழுவினை அமைப்பது குறித்து நேற்று முன்தினம் பிரதமருடன் பிரதி ஊடக அமைச்சர் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த ஆண்டுக்குள் ஊடக அக்கடமி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு சர்வதேச மாநாடு ஒன்று கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாடு குறித்து அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கருணாசேன பரணவிதாரண இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பல முக்கிய விருந்தினர்கள் பங்கேற்கவுள்ளனர். (இ-7-10)

# ஐ.தே.க., சு.கவை தோற்கடிக்கும் சக்தி ஒன்றிணைந்த எதிரணியிடம் உண்டு

## உதய கம்மன்பில கூறுகிறார்



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ.தே.கவையும் சு.கவையும் தோற்கடிக்கக்கூடிய சக்தி ஒன்றிணைந்த எதிரணிக்கு இருப்பதாக ஐ.ம.சு.மு. பாராளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெல உருமய தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார். பிவிதுரு ஹெல உருமய ஏற்பாடு செய்திருந்த ஊடக மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட அவர், சுதந்திரக்கட்சி உடைந்தால் ஐ.தே.கவே வெற்றிபெறும் என சு.க செயலாளர் துமிந்த திஸாநாயக்க கூறியிருக்கிறார்.

அதனை நாமும் ஏற்கிறோம். ஆனால் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலில் ஐ.தே.கவையும் சு.கவையும் தோற்கடிக்கும் சக்தி எமக்கு இருக்கிறது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் எமது கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் விமான நிலையத்தில் கடமையில்

(கொழும்பு)

விமானநிலைய வளாகத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து கடமைகளில் ஈடுபட குற்றப்புலனாய்வு விசாரணை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக்குற்றங்கள் மற்றும் ஏனைய குற்றங்கள் புரிந்தவர்கள் இரகசியமாக வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விமான நிலையத்தின் பாதுகாப்பும் இதன் மூலம் பலப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல குற்றங்கள் புரிந்து தப்பிச்சென்று வெளிநாட்டில் வசிக்கும் சந்தேக நபர்கள் மீண்டும் நாடு திரும்பும் போது கைது செய்வது இதன் மூலம் இலகுவாகியுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(இ-7-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 855


சிந்து




ரோஜா




கம்சனா





மதுரா




சஜி



டிலக்ஷனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீண்ட காலப் போருக்குப் பின்னர் கொழும்பின் அமைதிக்கான தேடல்

பூகோள விவகாரங்களில் வன்சக்தியைப் பயன்படுத்துவதில் இருந்து மென்சக்தியைப் பயன்படுத்துவதில் இலங்கை இராணுவம் தனது கவனத்தை செலுத்தியுள்ளது. எந்தவொரு எதிரியும் இல்லாமல் இலங்கை அமைதி மற்றும் உறுதிப்பாட்டை நோக்கி வேகமாகப் பயணிக்கின்றது.

இந்த மாதம் இராணுவமானது வன்சக்தியைப் பயன்படுத்துவதிலிருந்து தன்னை மாற்றிக் கொள்வது தொடர்பான பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றை கொழும்பில் நடத்தியது. இதில் கடற்படையினர், விமானப்படையினரும் பங்குகொண்டிருந் தனர்.

1990 இல் தென்னிலங்கையில் ஏற்பட்ட மாக்சிய ஜே.வி.பியின் இரண்டு பத்தாண்டு காலக் கிளர்ச்சியை இலங்கை இராணுவத்தினர் வெற்றி கொண்டமைக்கும் 30 ஆண்டுகால தமிழீழ விடுதலைப் புலிகளுட னான யுத்தத்தை இராணுவமானது 2009 இல் வெற்றி கொள்வதற்கும் இந்தியாவிடமிருந்தே சில உதவிகள் பெறப் பட்டன என்பதை மறந்து விட முடியாது.

தமது நாடுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் மற்றும் பயங்கர வாதத்தை தோற்கடிப்பதில் சில இராணுவங்கள் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கை பாதுகாப்புப் படையினரும் தமது நாட்டில் ஏற்பட்ட பல்வேறு கிளர்ச்சிகளை வேரோடு அழித்துள்ளதுடன் போருக்குப் பின்னர் மீள்கட்டுமானம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்ஒருங்கிணைப்பு மற்றும் மீளிணக்கம் ஆகிய விடயங்களில் பங்களித்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்ற வருடாந்த பாதுகாப்புக் கருத்தரங்குகள் கோத்த என நன்கு அறியப்படும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரம் மிக்க சகோதரரும் பிரபலமான கஜபா படையணியின் ஓய்வுபெற்ற கேணலுமான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையிலேயே முன்னர் இடம்பெறும். இவரது அனுமதியில்லாது எந்தவொரு பணியும் இடம் பெறாது.

2015இல் இலங்கையில்




ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், கடந்த செப்டெம்பர் முதலாம் திகதியன்று ஆரம்பித்த பாதுகாப்புக் கருத்தரங்கை, கோத்தபாயவின் எதிரியும் இவரால் சிறையில் அடைக்கப்பட்டவருமான, சிங்களப் படையணியைச் சேர்ந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமை தாங்கி நடத்தியிருந்தார். இதே காலப்பகுதியில் ஊழல் மோசடிக்காக கோத்தபாய மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட சம்பவமானது இலங்கை ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. 'கோத்தபாய சிறைக்குச் செல்வாரா?' என்கின்ற கேள்வி கொழும்பு வட்டாரங்களில் நிலவுகிறது.

ஏனெனில் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா ஆகிய மூவருமே யுத்தத்தை வெற்றி கொள்வதற்கான பிரதான நபர்களாவர்.

'புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டமை மற்றும் போரை வெற்றி கொண்ட தலைவர் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்கடிக்கப்பட்டமை ஆகிய இரண்டும் நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினையான மீளிணக்கத்திற்கான நிலையான தீர்வொன்றுக்கு வழிவகுத்துள்ளது.

முன்னைய அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மேற் குலகுடனான இலங்கையின் உறவை விரிசலடையச் செய்துள்ளது.

இதனை எமது அரசாங்கம் தற்போது சீர்செய்துள்ளது' என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புக் கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு அண்மையில் பயணம் செய்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான நகர்வுகளைப் பாராட்டிய போதிலும், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரால் மனிதாபிமான நடவடிக்கை எனக் கூறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ருவாண்டா மற்றும் செர்பெனிக்காவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஒப்பானது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்தேறிய கொடூரத்தை விபரிப்பதற்கு இதைவிட மிகவும் மோசமான ஒப்பீடு வேறெதுவும் இருக்காது. எனினும் இலங்கையானது தற்போது எந்தவொரு எதிரியும் இல்லாமல் சமாதானம், நிலைத்தன்மை மற்றும் மீளிணக்கத்தை நோக்கிப் பயணிக்கிறது என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

பணிப்போர் முடிந்ததன் பின்னர், பிரித்தானியாவின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான பீல்ட் மார்ஷல் லோர்ட் எட்வின் பிராமல் பின்வரும் விடயத்தை தெரிவித்திருந்தார்: 'தற்போது எமக்கென எந்தவொரு எதிரியும் இல்லை. நாங்கள் பிறிதொரு எதிரியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளோம்'. என்பதே அதுவாகும்.

12,800 முன்னாள் புலிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் புலிகள் மீண்டும் உருவாவது சாத்தியமற்றது என்கின்ற கருத்து நிலவுகின்ற போதிலும் 2013இல் கிளிநொச்சிக் காடுகளில் இரண்டு புலி உறுப்பினர்கள் சந்தேகத்திற்கிடமான வகையில் செயற்பட்டமை மற்றும் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் வன்முறை சார் ஆர்ப்பாட்டங்கள் போன்றன இங்கு சுட்டிக்காட்டத்தக் கதாகும்.

புலிகள் மீண்டும் தோன்றுவதென்பது வெறும் கற்பனையே' என கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் சாரா டீ சில்வா தெரிவித்தார்.

தற்போது இராணுவம் எவ்வித சவாலையும் எதிர்நோக்காத நிலையில், இதில் உள்ள இலட்சம் வரையான படையினரை எதற்குப் பயன்படுத்துவது என்கின்ற கேள்வி உள்ளது.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இராணுவ வீரர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன.

தற்போது இவர்கள் இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணியில் ஈடுபடுகின்றனர். அதாவது வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு தொடர்பான நிவாரணப் பணிகள், வீதிப் புனரமைப்பு, வீடமைப்பு, திருத்த வேலைகள் போன்றவற்றில் இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

(தொடரும்)

# புதைக்கப்பட்ட லசந்தவின் சடலம் மீண்டும் வெளியே எடுக்கப்பட்டது

(கொழும்பு)

**படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் லசந்த விக்ரமதுங்க வின் சடலம் நேற்று மீண் டும் தோண்டி எடுக்கப்பட்டது.**





லசந்த விக்ரமதுங்கவின் சடலத்தை தோண்டி எடுத்து மீண்டும் பிரேத பரிசோ தனைகளை மேற்கொள்வத ற்கு கல்கிஸ்சை நீதவான் மொஹமட் சஹாப்தீனால் கடந்த 8 ஆம் திகதி இந்த அனுமதி வழங்கப்பட்டிருந் தது.


ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் பிரேத பரிசோதனை அறிக்கைக் கும், இரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்கும் இடையில் முரண்பாடு காணப்படுவ தாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத் திற்கு அறிவித்துள்ளது.

இந்த முரண்பாடுகளை தணிக்கும் வகையில் பரி சோதனைகளை மீள மேற் கொள்வதற்கு முன்வைக் கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சடலம் நேற்று காலை தோண்டி எடுக்கப்பட்டது.

கொழும்பு மேலதிக நீத வான் மொஹமட் மிஹறால் பொரளை பொது மயான த்திற்கு நேற்று காலை 8.45 அளவில் விஜயம் செய்ததை அடுத்து அவரது மேற்பார் வையின் கீழ் சடலம் தோண் டும் பணி ஆரம்பிக்கப்பட் டது. அத்துடன் குறித்த பகுதி யில் பாதுகாப்பும் பலப்ப டுத்தப்பட்டது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி கொலை செய்யப்பட்டு, பொரளை பொது மயானத் தில் அவரது சடலம் நல்லடக் கம் செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (இ-7-10)





நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தினம் கொண்டா டப்பட்டது. இதில் 30 மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா கல்வி உதவு தொகை வழங்கும் நிகழ்வை பிரம்மஸ்ரீ புவனேந்திர சர்மா வழங்கி ஆரம்பிப்பதனையும் அருகில் பிரதேச செயலர் சி. ஜெயகாந் நிற்பதையும் காணலாம்.

## புசல்லாவ இளைஞர் ரீ சேட்டில் சுருக்கிட்டார் என்பதை ஏற்கமுடியாது

### சந்தேகம் வெளியிட்ட நீதவான்

புசல்லாவ இளைஞரின் மரணம் குறித்து நீதவான் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

புசல்லாவ பொலிஸ் சிறைக் கூடத்தில் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான வழ க்கு விசாரணைகளின் போது நீதவான் இதனைத் தெரி வித்துள்ளார்.

கம்பளை நீதவான் சாந் தனி மீகொட இவ்வாறு சந் தேகம் வெளியிட்டுள்ளார்.

2.5 அங்குலம் நீளமும் 18 அங்குலம் அகலமும் உடைய ரீ சேர்ட் ஒன்றின் மூலம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை.

தூக்கிட்ட இடத்தை பார் வையிட்டு விசாரணை நடத் தப்பட வேண்டுமென நீத வான் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் 30 வய தான நடராஜா ரவிராஜ் என்ற இளைஞரே உயிரிழந்திருந்தார்.

கம்பளை நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது ரவிச்சந்திரனின் தந்தை, சகோதரர் மற்றும் தாயார் ஆகியோர் பிரசன்னமாகி யிருந்தனர். அணிந்திருந்த டீ சேர்ட்டைக் கொண்டு இளை ஞர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலி ஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும், பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகியே கொல்லப்பட்டதாக ரவிச் சந்திரனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

டீ சேர்ட்டை வழக்கு பொரு ளாக வைக்குமாறும், எதிர் வரும் 30ஆம் திகதி சிறைக் கூடத்தை நேரில் பார்வை யிடவுள்ளதாகவும், வழக்கு விசாரணைகளை ஒக்டோ பர் மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாகவும் நீதவான் அறிவித்துள்ளார். (இ-7-10)

## ட்ரோன் கமராவால் பதற்றம்

படுகொலை செய்யப் பட்டு, பொரளை கனத்தை, மயானத்தில் புதைக்கப்பட் டுள்ள, சண்டே லீடர் பத்திரி கையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் சடலம், ஐந்தரை வருடங் களின் பின்னர், நேற்று செவ் வாய்க்கிழமை தோண்டியெ டுக்கப்பட்டது. அங்கு செய்தி களை சேகரிப்பதற்கு சென் றிருந்த ஊடகவியலாளர் களை மயானத்துக்குள் செல் வதற்கு பொலிஸார் அனும தியளிக்கவில்லை. இத னால், கம்பிகளுக்கு வெளியே ஊடகவியலாளர்கள் நின்று கொண்டிருந்தனர். இந்நி லையில், கனத்தை மயானத் துக்குள் ட்ரோன் கமரா சுற்றி திரிந்தமையால், பொலிஸார் கலவரம் அடைந்தனர். வானிலிருந்து படம் பிடித்த அந்தக் கமராவைப் பிடிப் பதற்குப் பொலிஸாரினால் முடியவில்லை.

எனினும், கனத்தை மயானத்தின் பாதுகாப்பு வேலிகளுக்கு வெளியே ஊடகவியலாளர்கள் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கிப் பொலிஸார் ஓடி வந்தபோதிலும், ட்ரோன் கம ராவின் உரிமையாளரைப் பொலிஸாரினால் தேடிப் பிடிக்க முடியவில்லை. (இ-7-10)

## செய்தித்துளிகள்

### விபத்தில் சிக்கிய பொலிஸ் அதிகாரிகள் இருவர் பலி!

கடான - திவுலுபிட்டிய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உயிரிழந் துள்ளனர். இவ்விபத்து சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரிகள் சென்ற மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகன மொன்றில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள் ளது. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகள் மஹேஸ் சந்தரதாச (வயது 28) மற்றும் விபுலு முனசிங்க என தெரிவிக்கப்பட்டு ள்ளதுடன், இவர்கள் கடுவனா மற்றும் கடவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

### குவைத்தில் கசிப்பு காய்ச்சிய இலங்கையர் ஒருவர் கைது

குவைத் நாட்டில் தனது தங்குமிடத்தில் கசிப்பு காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை தொழிலாளி ஒருவரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையை சேர்ந்த இந்த தொழிலாளி சல்மியா என்ற பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி வீடமைப்பு தொகுதியில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வசித்து வந்த தொடர்மாடி குடியிருப்பில் உள்ள வசிப்பிடத்தில் கசிப்பு காய்ச்சும் போது திடீரென தீப்பிடி த்துள்ளது.

இந்த தீ தொடர்மாடியில் பரவியதை அடுத்து, அவர் கசிப்புக் காய்ச்சியது தெரியவந்துள்ளது. (இ-7-10)


### சிறுவர் தினவிழா

உலக சிறுவர் தினவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் மாணவர் பாரா ளுமன்றத்தால் நடத்தப்படவுள்ளது.

பாடசாலை முதல்வர் செ.பேரின்பநாதன் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி.திசாந்தினி நடராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வல யத்தின் ஆரம்ப பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவிசாகன், பாடசாலையின் பழைய மாணவியும் சாவகச்சேரி மக்கள் வங்கி கைதடி கிளையின் உத்தியோகத்தருமாகிய திருமதி.சுமனா நமனகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

### பனை உற்பத்தி பயிற்சி ஆரம்பம்



நெடுந்தீவு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு ஏற்பாடு செய்த பனை உற்பத்திசார் சுய தொழில் வாழ்வாதாரப் பயிற்சியினை பிரதேச செயலர் சி. ஜெயகாந் ஆரம்பித்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

# அரசியல் கட்சிகளை உடைப்பது மகிந்தவின் பொழுதுபோக்கு

## சந்திரிகா குற்றச்சாட்டு



**அரசியல் கட்சிகளை உடைப்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு பொழுது போக்காக மாறறமடைந்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவு நிகழ்வுகள் வெயாங்கொடவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது சந்திரிகா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவடையச் செய்வது சிறிசேனவின் பொழுதுபோக்காக அமைந்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது ஆட்சிக்காலத்தில் நாட்டின் கல்வித்துறைக்காக பாரியளவில் சேவையாற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சூரிய சக்தி மின்சாரத்தைப் பெறும் நிவாரணத்தொகை அதிகரிப்பு



சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான நிவாரணத்தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த எரிசக்தியை வழங்குவதற்காக பொருத்தக்கூடிய உபகரணங்களுக்கான அடிப்படைச் செலவு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா ஆகும். இந்தத் தொகையை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நிலையான எரிசக்தி அதிகாரசபை தலைவர் கீர்த்தி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

சூரிய ஒளி மூலமான எரிசக்தியை வழங்குவதற்கு 115 நிறுவனங்கள் எரிசக்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை அதிகார சபையின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்றும் கூறினார்.

இதற்கென மக்கள் வங்கி, சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி ஆகியன மூலம் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தக வங்கிகளும் இந்த திட்டத்திற்குள் உள்வாங்கப்படும்.

சூரிய ஒளி மூலமான எரிசக்தியை பெற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் மேலதிக மின சக்தியை மின்சார சபைக்கு விற்பனை செய்ய முடியும்.

சூரிய ஒளி மூலமான மின்சாரத்தை பெறுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களின் ஆயுட்காலம் 20 வருடங்கள் ஆகும். இந்த வசதிகளை மேம்படுத்துவதற்காக சர்வதேச தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 இலட்சம் வீடுகளை இந்தத் திட்டத்தில் உள்வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# அபிவிருத்தி முயற்சிகளை காணவே முடியவில்லை

## புலம்புகிறார் மகிந்த



அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளை எங்கும் காண முடிவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிலிமத்தலாவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு இரண்டு ஆண்டுகள் கடக்க உள்ள நிலையில் பாரிய அபிவிருத்தி மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது.

எனினும் இந்த அபிவிருத்திப் பணிகள் எங்கு மேற்கொள்ளப்பட்டன என்பது தெரியவில்லை.

எங்கும் அவ்வாறான ஓர் அபிவிருத்தி தென்படுவதாக இல்லை.

அரசியல் அமைப்பு திருத்தங்களின் ஊடாக சில தரப்பினரை திருப்திப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

வடக்கில் நல்லிணக்கம் சீர்குலைக்கப்படக்கூடிய சாத்திய நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும், நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதனால் இது பற்றி ஊடகங்களில் தகவல்களை வெளியிட வேண்டாம் என அதிகாரிகள் கோரியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சி வலுவடையும் நேரத்தில் அரசாங்கம் பல்வேறு தந்திரோபாயங்களை பயன்படுத்துகின்றது.

இதேவேளை, கட்சி என்பது பெயர்ப்பலகைக்கோ அல்லது காரியாலயமொன்றுக்கோ வரையறுக்கப்பட்டிருக்கக்கூடாது என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## ஜெமினிகணேசனின் 85ஆவது பிறந்த நாள் விழா

**261**

### விருதுகள்

தாமரை நெஞ்சம் என்ற படத்துக்கு 1968 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் சிறந்த பட விருது கிடைத்தது. இதேபோல ''காவியத்தலைவி''யில் நடித்ததற்காக ஜெமினிக்கு சிறந்த நடிகர் விருது கிடைத்தது. களத்தூர் கண்ணம்மா, பார்த்திபன் கனவு, ராமு, இருகோடுகள் ஆகிய படங்கள் சிறந்த தமிழ்ப் படத்திற்கான மத்திய அரசின் விருது பெற்றன.

1966-1967இல் கலைமாமணி பட்டம் வழங்கப்பட்டது. 1970 மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது கிடைத்தது. அதே ஆண்டில் சங்கீத நாடக சங்க (இயல், இசை, நாடக மன்ற) விருதும் கிடைக்கப் பெற்றார்.

### 4ஆவது திருமணம்

திரை உலகில் காதல் மன்னன் என்று அழைக்கப்பட்ட ஜெமினிகணேசன் நிஜ வாழ்க்கையிலும் காதல் மன்னனாகவே வாழ்ந்தார்.

ஜெமினிகணேசன் ஏற்கனவே பாப்ஜி, புஷ்பவல்லி, சாவித்திரி ஆகியோரை திருமணம் செய்தவர்.

இந்நிலையில் 1998 ஒக்டோபர் மாதத்தில் ஜெமினிகணேசன் 4ஆவது முறையாக காதல் திருமணம் செய்தார். ஜெமினியை மணந்து கொண்ட அந்த பெண்ணின் பெயர் ஜூலியானா. சத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்.

ஜெமினிகணேசனுக்கு அப்போது வயது 79. அவர் 4 ஆவதா மணந்துள்ள ஜூலியானாவுக்கு வயது 35.

ஜெமினிகணேசன் - ஜூலியானா திருமணம் சென்னை அஷ்டலட்சுமி கோவிலில் வைதீக முறைப்படி நடந்தது. அதோடு வேளாங்கண்ணி மாதா சேர்ச்சில் மோதிரம் மாற்றி கிறிஸ்தவ முறைப்படியும் திருமணம் நடந்தது.

### தனிக்குடித்தனம்

ஜெமினிகணேசன் நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் முதல் மனைவி பாப்ஜியுடன் வசித்து வந்தார். திருமணத்துக்குப் பிறகு புது மனைவி ஜூலியானாவுடன் சென்னை தியாகராய நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வாடகை வீட்டில் குடியேறினார்.

### முறிந்தது

ஆனால் ஜெமினிகணேசன் -ஜூலியா மணவாழ்க்கை ரொம்பக்காலம் நீடிக்கவில்லை. சீக்கிரத்திலேயே முறிந்து விட்டது. தமிழ்த்திரை உலகில் காதல் மன்னன் என்று புகழ் பெற்ற ஜெமினிகணேசன் தனது 85 ஆவது வயதில் மரணம் அடைந்தார்.



ஜெமினிகணேசன் சதாபிஷேக (80-வது வயது) விழாவின்போது, மனைவி பாப்ஜியுடன்.

### 85 ஆவது பிறந்த நாள் விழா

சதாபிஷேகம் கொண்டாடிய தம்பதியர் ஜெமினிகணேசன்-பாப்ஜி. திரையுலக முக்கிய பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். 2004 நவம்பர் மாதம் 17ஆம் திகதி தனது 85ஆவது பிறந்த நாளை ஜெமினிகணேசன் மனைவி பாப்ஜி, மகள்மார், மருமகன்மார் மற்றும் பேத்திமார், கொள்ளுப் பேத்திமார்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார். அதன் பிறகு அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அப்பல்லோ வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்ற பிறகு உடல் நிலை தேறி வீடு திரும்பினார். மீண்டும் உடல் நிலை மோசமானதால் வைத்தியசாலையில் டயாலிசிஸ் செய்யப்பட்டது. வைத்தியர்கள் கைவிரித்து விடவே பிறகு வீட்டிற்கு அழைத்து வந்து விட்டனர்.

வீட்டிற்கு முதலமைச்சர் ஜெயலலிதா சென்று பார்த்து உடல் நலம் விசாரித்தார்.

(தொடரும்)

எவனாவது உன்னை ஒருமுறை காட்டிக்கொடுத்தால் அதுஅவன் குற்றம்.
- ருமேனியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தீர்வைக் குழப்பும் என்பாரை அறிமினே!

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 24ஆம் திகதி நடந்த எழுக தமிழ் எழுச்சிப்பேரணி சிலருக்கு தாங்கொணா அதிர்ச்சியைத் தந்துள்ளது.

இந்த அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாதவர்களுக்கு தியாகி திலீபனின் நினைவுதினம் சற்று ஆற்றுப்படுத்தியிருக்கும் என நம்பலாம்.

கடந்த ஆண்டும் தியாகி திலீபனின் நினைவு தினம் நடந்தபோது, அதனை அனுஷ்டிப்பதில் ஆர்வம் காட்டாத சில தமிழ் அரசியல்வாதிகள் இந்த வருடம் முண்டியடித்து நின்றதைக் காணமுடிந்தது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்காத தோசம் நீங்க தியாகி திலீபனை விட்டால் வேறு யாருளர் என்றவகையில் அவர்கள் தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டிருக்கலாம்.

தன் உயிரை தமிழ் மக்களுக்காக ஈகை செய்த ஒரு உத்தம தியாகியின் புனித நாளில் போக்கிலித்தன அரசியலை கைவிட்டு அந்த தியாகத்தை மனம், மெய், மொழிகளில் அர்ச்சிக்க வேண்டும் என்பதே நம் தாழ்மையான கருத்து.

ஏனெனில் இந்த உலகம் தர்மத்தின்; அறத்தின்பாற்பட்டது. அறமே வெல்லும். அறம் தோற்பதுபோல காட்சியளித்தாலும் ஈற்றில் அறம் வெல்வது உறுதி.

ஆனால் எக்காலத்திலும் ஏமாற்றுதல்கள், ஆலாவர்ணங்கள், ஆசாடபூதித்தனங்கள் வெற்றிதரும் என்று எவரும் நினைத்துவிடக்கூடாது.

இது ஒருபுறம் இருக்க, தமிழ் மக்கள் பேரவை நடத்திய எழுச்சிப்பேரணியால் இனப்பிரச்சினைக்கான தீர்வு குழப்பமடையக்கூடியதான வாய்ப்பு உண்டென ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

2016ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் என்று தமிழ் மக்களுக்கு உறுதியளித்தவர்களுக்கு தங்கள் உறுதிமொழி நிறைவேறாது என்ற உண்மை தெரிந்தவுடன் எழுச்சிப் பேரணியை வலிந்திழுத்து பேரணி நடந்ததால்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தடைப்படுகிறது என்று கூறமுற்பட்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துங்கள் என அரசிடம் அகிம்சை வழியில் கேட்பது கூட தீர்வை பாதிக்கும் என்று சொல்பவர்களை நாம் என்னதான் செய்யமுடியும்.

ஆனால் ஒன்றுநடந்து முடிந்த எழுக தமிழ் எழுச்சியில் பேரணி இனப்பிரச்சினைக்கான தீர்வை பாதிக்கும் என்றால் நீங்கள் எதற்கு என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

பேரவையின் ஏற்பாட்டில் தமிழ்மக்கள் ஒன்று திரண்டு தங்கள் குறைகளைக் கூறியதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு பாதிக்கப்படும் என நீங்கள் உங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு வீடுகளில் இருப்பதே சாலப்பொருத்துடையது எதையும் எப்படியும் கதைக்கலாம்; புரட்டிப்போடலாம் என்ற சிந்தனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழ்மக்கள் ஒன்று திரண்டு பேரணியாக நடந்து தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதைக்கூட புரிந்துகொள்ள முடியாமல், பேரணியால் இனப்பிரச்சினைக்கான தீர்வுபாதிக்கப்படும் என்று கூறுவது தமிழ் மக்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கச்செய்யும் என்பதை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மை கூறிக்கொண்டவர்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

இல்லையேல் இப்போது இருக்கின்ற பதவிகளுக்கு அடுத்தத் தேர்தலில் ஆபத்து வருவதை எவராலும் தடுக்க முடியாமல் போகும்.

# அரசியலமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பில் இத்தாலியில் டிசெ.4ஆம் திகதி வாக்கெடுப்பு

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இத்தாலியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை நீக்கம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரத்தை பறிக்க வகைசெய்யும் அரசியலமைப்பு திருத்த சட்டம் தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி பொது வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி நாட்டில் ஆட்சி இயந்திரத்தின் தலைவரான பிரதமரை தங்களது வாக்குரிமையின் மூலம் நீக்கம் செய்யும் அதிகாரம் பாராளுமன்ற மேல்சபை மற்றும் கீழவை உறுப்பினர்களுக்கு அந்நாட்டின் அரசியலமைப்பு சட்டம் உறுதிப்படுத்தியுள்ளது.

5 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யாமல், இவ்வாறு அவ்வப்போது ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டதால் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் இத்தாலியில் 63 முறை ஆட்சிக் கவிழ்ப்புகளும் புதிய அரசுகள் தேர்வும் நடைபெற்றுள்ளது. இதனால், ஸ்திரமான ஒரு அரசு அமையாமல் போனதுடன், முந்தைய ஆட்சியாளர்கள் கொண்டு வந்த திட்டங்களும், கொள்கையளவிலான சில பொது சீர்திருத்தங்களும் நடைமுறைப்படுத்தப்படாமல், பாதியிலேயே முடங்கிப் போயின.

இதன்விளைவாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து மந்தநிலையை சந்தித்து வருவதுடன், வேலையிலலா திண்டாட்டமும் வெகுவாக உயர்ந்து வருகிறது.

இந்த நடைமுறையை முடிவுக்கு கொண்டுவந்து பிரதமரை தங்களது வாக்குரிமையின் மூலம் நீக்கம் செய்ய பாராளுமன்ற மேல் சபை மற்றும் கீழவை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து நீக்குவது என தற்போதைய இத்தாலி பிரதமரான மட்டியோ ரென்சி தீர்மானித்தார்.

இதற்காக, இத்தாலி நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்யவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த சட்டதிருத்தத்துக்கு மக்களின் முடிவு என்ன? என்பது தொடர்பாக நாடு முழுவதும் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதனையடுத்து, அரசியலமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி பொதுவாக்கெடுப்பு நடைபெறும் என நேற்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இத்தாலி பாராளுமன்றத்துக்கு எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த வாக்கெடுப்பில் அரச தரப்பு தோல்வியடைந்தால் தனது பிரதமர் பதவியை உடனடியாக இராஜினாமா செய்யப்போவதாக மட்டியோ ரென்சி அறிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த பொது வாக்கெடுப்பின் முடிவு எவ்வாறு அமையும்? என்பது தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளின்படி, இந்த சட்ட திருத்தத்துக்கு ஆதரவாக 45 சதவீதம் மக்களும், எதிர்த்து 55 சதவீதம் மக்களும் வாக்களிக்கக்கூடும் என தெரியவந்துள்ளது. (செ)

# வரட்சி காரணமாக நாட்டில் 35000 குடும்பங்கள் பாதிப்பு

நாட்டின் வரட்சியின் காரணமாக கிழக்கு, வடமேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய குடும்பங்கள் தங்களது குடிநீர் உட்பட நாளாந்த பாவனைக்குரிய நீரைப் பெற்றுக் கொள்வதில் இன்னல்களையும், சிரமங்களையும் எதிர்கொள்வதாக கூறப்படுகின்றது.

வரட்சினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் குளங்களும், கிணறுகளும் நீர் இன்றி காணப்படுகின்றன.

குடிநீருக்காக அல்லலுறும் மக்கள் கடந்த ஒரு மாதத்திற்கும். மேலாக நீடித்து வரும் வரட்சியின் காரணமாக சிறு தானியச் செய்கை உட்பட பயன்தரு தாவரங்களும் நீரின்றி கருகி மடிகின்றன.

குளங்களும், நீர் நிலைகளும் நீர் இன்றி காணப்படுவதால் கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மீன்களும் செத்து மடிகின்றன. காட்டு யானைகள் நீர் தேடி மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி வருகின்றன.

அரசு இடர் முகாமைத்துவ மையம் வெளியிட்டுள்ள தகவல்களின் படி வரட்சியினால் வட மத்திய மாகாணத்திலுள்ள பொலநறுவை மாவட்டத்தில் மட்டும் 19 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 71 ஆயிரம் பேர் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது

வரட்சியின் காரணமாக குறிப்பாக குடிநீர் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பிரதேசங்களில் உள்ளூராட்சி சபைகள் ஊடாகவும், தேசிய நீர் வழங்கல் சபையின் ஊடாகவும் நீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. ஆனால், அது போதுமானதாக இல்லை என மக்கள் தெரிவித்துள்ளார்கள். (செ)

## ரவிராஜ் படுகொலை வழக்கு

# ஜூரிகள் சபையில் விசாரிக்க பாதிக்கப்பட்ட தரப்பு எதிர்ப்பு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கை ஜூரிகள் சபை முன்னிலையில் விசாரணை செய்ய சட்டமா அதிபர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய மற்றும் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் ஆகியோர் மேற்கண்டவாறுதமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதற்கு நடராஜா ரவிராஜ் தரப்பு சட்டத்தரணியான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா எதிர்ப்பு வெளியிட்டார்.

இதனையடுத்து ஜூரிகள் சபையின் கீழா அல்லது தனி நீதிபதியின் கீழா ரவிராஜ் படுகொலை விவகாரத்தை விசாரணை செய்வது என்பது குறித்த தீர்மானத்தை எடுக்க, எதிர்வாதங்களை முன்வைக்குமாறு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அத்துடன் பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி கே.வி. தவராசா அடுத்த தவணையின் போது விசாரணை முறைமை தொடர்பில் ஆட்சேபனை முன்வைக்க பாதிக்கப்பட்ட தரப்பு என்ற ரீதியில் அவர்களுக்கு உள்ள சட்ட ரீதியிலான உரிமை தொடர்பில் நீதிமன்றை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக, இவ்வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (செ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் இரத்தினபுரம் கோவிந்தன் கடைச் சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாத்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப் படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் சிவன் கோவில் பிரதேசம், குட்செட் வீதி, தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பொறுமைக்கு அழிவில்லை



✦ பொறுமை மனிதர்கள் அனைவருக்கும் அவசியமானது. பொறுமையுள்ளவனுக்கு என்றுமே அழிவு உண்டாகாது.

✦ கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வந்து விட்டால் வாழ்வில் துன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

✦ பண ஆசையால் அலையும் கருமி போல கடவுள் மீது ஆசை கொண்டு அலைந்தால் அவனருள் கிடைக்கும்.

✦ அக்கறை உள்ளவனுக்கு அனைத்தும் எளிதாக கிடைக்கும்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் - 2016
# கே.சி.சி.சி, சென்றலைட்ஸ், திருநெல்வேலி முன்னிலை

ஜோர்ஸ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 7 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2016 தொடக்கம் 31.07.2016 வரை போட்டிகள் நடைபெற்றுள்ளன.

அப்போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி. அணி 19 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 107.42 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 17 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 103.25 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் திருநெல்வேலி 6 கிரிக்கெட் கழக அணி 21 போட்டிகளில் பங்கு பற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 103.9 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

மானிப்பாய் பரீஸ்-94.20 (20/12), ஜொலிஸ்ரார் 90.96 (22/10), யாழ்.ஜொனியன்ஸ் 81.42 (16/11), யாழ்.பல்கலைக்க ழகம் 78.89 (13/09) ,ஓல்ட் கோல்ஸ் 57.68 (10/05), கிறாஸ்கொப்பர்ஸ் 56.62 (13/06), யாழ்.சென்றல் 50.87 (12/06), பற்றீசியன்ஸ் 47.91 (14/06), ஸ்கா ந்தஸ்ரார்ஸ் 44.54 (13/05), சிறிகா மாட்சி 42.28 (10/05), ஹாட்லியைற்ஸ் 34.42 (09/04), ஸ்ரான்லி 31.90 (10/02), யூனியன்ஸ் 31.10 (10/02), டிறிபேக் ஸ்ரார் 29.17 (07/04), விக்டோறி 28.49 (09/03), அரியாலை சென்றல் 27.63 (10/03), லிங்ஸ் 22.37 (06/02), திருநெல்வேலி YMHA 18.13 (08/00), நியூஸ்ரார் 17.88 (07/01), றெயின்போ 7.82(04/01), யங்ஸ்ரார் 6.73 (04/00) (கு)

# சென். லூட்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதியில் யங்ஹென்றீஸ்





பொலிகண்டி பாரதி உதைபந்தாட்ட தொடரில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற மின்னொ ளியிலான முதலாவது போட்டியில் இளவாலை சென். லூட்ஸை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் மோதியது.

முதல் பாதியாட்டத்தில் யங்ஹென்றீஸ் வீரர் நிறோஜன் 12 ஆவது நிமிடத்தில் கோல் போட முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் யங்ஹென்றீஸ் ஆதிக்கம் 27ஆவது நிமிடத்தில் மதுசன் அணியின் கோலை அதிகரித்தார்.

அடுத்த 29 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் தனேஷ் கோல் போட்டு அணியின் வெற்றியை உறுதிப்படுத்த 37 ஆவது நிமிடத்தில் சென். லூட்ஸ் கனிஸ்ரனால் அணியின் முதல் கோல் பாதியப்பட்டது. இறுதியாட்ட நேர முடிவில் 03:01 என்ற ரீதியில் சென். லூட்ஸை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது யங்ஹென்றீஸ். ஆட்ட நாயகனாக யங்ஹென்றீஸ் தனேஷ் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# வடக்கின் சுப்பர்கிங் போட்டி முடிபுகள்

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் வல்வை அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதியது.

இப்போட்டியில் 3:2 என்ற கோல் கணக்கில் வல்வை அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றைய போட்டியில் மகாத்மா அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதியது. இப்போட்டியில் 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவுற்றதால் சமநிலை தவிர்ப்பு உதையில் 3:4 என்ற கோல் கணக்கில் மகாத்மா அணி வெற்றி பெற்றது. (கு)

# விக்னேஸ்வரா வி.கழக உதைபந்தாட்டத் தொடர்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடர் 2016 அன்று கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியாட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் போடாது முதல் பாதியாட்டம் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தின் 43 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் ரதன் கோல் போட ஆட்டம் தொடர்ந்தது. மீண்டும் யங்கம்பன்ஸ் அணிக்கு பனால்டி வாய்ப்பு கிடைத்தது. அந்த பனால்டி வாய்ப்பில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டுள்ளது. போட்டியின் முடிவினை உரிய கழகம் அறிவிப்பதாக கூறப்பட்டுள்ளது.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன் -01 கோல் போட்டார். (கு)



*2016 ஆம் ஆண்டிற்கான தேசிய கரப்பந்தாட்ட போட்டியில் பங்கு பற்றிய வடமாகாண அணியை படத்தில் காணலாம்.*

# வடக்கின் வல்லரசன் தொடர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் கடந்த 23 ஆம் திகதி அன்று இடம்பெற்ற போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர்கள் தர்சன், ரதன் தலா ஒவ்வொரு கோல்களை பெற்றுக்கொடுக்க முதல் பாதியாட்டம் 02:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் தர்சன், ரதன் தலா ஒவ்வொரு கோல் போட்டனர். அடுத்து யங்கம்பன்ஸ் அணி அனுபவம் வாய்ந்த பின்கள வீரர் ஜெகதீஸ் நீண்ட தூரத்திலிருந்து அணியின் 5 ஆவது கோலை பதிவு செய்ய இறுதியாட்ட நேர முடிவில் 05:00 என்ற ரீதியில் பெரியவிளான் சென்.அன்ரனிஸ் அணியை வீழத்தியது யங்கம்பன்ஸ் அணி. யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன், தர்சன் தலா 2 கோல்களையும் ஜெகதீஸ் ஒரு கோலினையும் போட்டனர். (கு)

# வவுனியாவுக்கு மூன்றாமிடம்




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 28 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி பதுளை வின்சன் டயஸ் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற 20 வயதுக்கு மேற்பட்ட 5000 மீற்றர் ஓட்டப் போட்டியிலே வவுனியா சுந்தரபுரத்தைச் சேர்ந்த ஆர். சாளினி மூன்றாமிடம் பெற்றுள்ளார். (க-28)

## விமான நிலையத்தில் வெளி.பணம் பறிமுதல்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் அனுமதியின்றி வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல இருந்த ரூபாய் 18 லட்சம் வெளிநாட்டு பணம் பறிமுதல் செய்யப்பட்டது

சென்னை விமான நிலையத்தில் நேற்று அதிகாலை இலங்கை செல்லும் விமானம் புறப்பட தயாராக இருந்தது.

அதில் ஏற வந்த பயணிகளின் உடமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

சென்னையை சேர்ந்த சாகுல் அமீத்தின் பயணப் பையை சோதனை செய்தபோது அமெரிக்க டொலர், யூரோ பணம் காணப்பட்டதுடன் பணம் இருப்பதற்கான ஆவணம் அவரிடம் இருக்கவில்லை.

இதையடுத்து வெளிநாட்டு பணத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இந்திய ரூபாயில் இதன் மதிப்பு 18 லட்சம ஆகும்.

விசாரணையில் சாகுல் அமீத் சுற்றுலா விசாவில் இலங்கை வழியாக சிங்கப்பூர் செல்ல இருந்தது தெரிந்தது.

அவருக்கு வெளிநாட்டு பணம் கிடைத்தது எப்படி? யாருக்கு கொண்டு செல்லப்படுகிறது என்பது குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருகிறது. (செ)

இந்தியாவிலிருந்து வரும் இலங்.அகதிகளுக்கு

## வாழ்வாதார உதவிகளை முன்னெடுப்பது அவசியம் - சி.வி

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து வருகை தருபவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை முன்னெடுப்பது அவசியம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் மீள் குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். மேலும் 2 ஆயிரத்து 508 பேரை இலங்கைக்கு திரும்பவும் அனுப்பவுள்ளதாக கூறியுள்ளார்கள். எனவே அவர்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேணடியது மிக அவசியம்.

அவர்களுக்குரிய வீட்டுத்திட்டங்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என கேள்வியெழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த மாவட்ட அரச அதிபர், இதுவரை 977 குடும்பங்கள் திரும்பி வந்துள்ளார்கள்.

இதுவரை அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. ஆனால் இந்த வருடம் மீள் குடியேற்ற அமைச்சினால் 140 வீடுகள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடமும் வழங்கப்படும்.

ஆனால் இந்தியாவில் இருந்து வருபவர்களுக்கு புதிதாக காணி வழங்க யாழ் மாவட்டத்தில் அரச காணி இல்லை என தெரிவித்தார்.

இதற்கு வடமாகாண பிரதம செயலாளர்கருத்து தெரிவிக்கையில் இந்தியாவில் இருந்து வருகை தருபவர்களின் விபரங்களை அந்தந்த பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைப்பது அவர்களை இலகுவில் இனங்காணுவதற்கு உதவியாக அமையும்.

காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்க வன்னியில் அரச காணிகள் தாராளமாக உள்ளது அங்கு வழங்கப்படலாம் என அவர் தெரிவித்தார். (செ-9)

## எட்கா அழுத்தம் இந்தியா...

ஒன்றாகும். இலங்கைக்கு இது வேண்டாம் எனின் நாங்கள் எந்த வகையிலும் இதில் அழுத்தம் பிரயோகிக்க மாட்டோம். எதனையும் திணிக்க மாட்டோம். இரு தரப்பு பரஸ்பர புரிந்துணர்வுடனேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று இந்திய மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

ஒன்றாக இருப்பதா? இல்லையா? என்பதை இரண்டு தரப்புக்களுமே தீர்மானிக்க வேண்டும். ஒரு வழிப்பாதையில் எந்த செயற்பாடும் முன்னெடுக்கப்படாது. இரு தரப்பு இணக்கப்பாட்டு உடன்படிக்கையே முன்னெடுக்கப்படும் என்றும் அவர குறிப்பிட்டார்.

எட்கா கைச்சாத்திடப்பட்டால் 120 கோடி மக்களை கொண்ட சந்தை ஒன்று உங்கள் நாட்டில் கிடைக்கும். உங்களது அனைத்து பொருட்களும் சேவைகளும் இந்தியாவிற்கு திறந்துவிடப்படும். உங்களது விவசாயப் பொருட்கள் இந்தியாவிற்கு வரும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சம்பூர் விடயத்தில் இலங்கையின் தேசிய முக்கியத்துவம் கவனத்திற் கொள்ளப்பட்டது. இலங்கை அனல்மின் உற்பத்தியிலிருந்து வெளியே செல்வதற்கான தேசிய முக்கியத்துவம் வெளிக்காட்டப்பட்டது. அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனினும் இது இலகுவான விடயம் அல்ல. கடினமாக இருந்தாலும் இந்த விடயத்தில் இலங்கையுடன் ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருக்கின்றது. ஐயோ இப்படியாகிவிட்டதே என்று இந்தியா கருதவில்லை. நாம் இந்த விடயத்தில் தேசிய முக்கியத்துவ விடயத்தை பாராட்டுகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்றைய தினம் கொழும்பில் சர்வதேசவர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுடான இருதரப்பு சந்திப்பை நடத்தினார். அதன் பின்னர் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே இந்திய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## இராணுவ முகாம் அருகே...

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றையதினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் மீள்குடியேற்றம் தொடர்பான விபரங்கள் கலந்துரையாடப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்.

வலி வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் தற்போதுள்ள 971 குடும்பங்களில் 641 பேர் தாம் வலிவடக்கை சேர்ந்தவர்களாக இருந தாலும் தமக்கு சொந்த காணி இல்லை என்றே குறிப்பிடுகிறார்கள். எனவே அவர்களுக்காக காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையிடம் இருந்து பெற்றுக்கொண்ட 60 ஏக்கர் அரச காணியில் அவர்களுக்கு காணி வழங்கப்பட்டு வீட்டுத்திட்டமும் வழங்கப்படுகிறது.

வீட்டுத்திட்டம் வழங்குவதில் எந்தவிதமான ஒழிவு மறைவின்றி வெளிப்படை தன்மையில் குறித்த தெரிவுகள் இடம்பெற்றுள்ளது.

வலிவடக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் தற்போது முகாம களில் 971 குடும்பங்களும் வெளியில் 7 ஆயிரத்து 500 குடும்பங்களும் உள்ளார்கள். இன்னும் 9 ஆயிரத்து 522 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டி உள்ளார்கள்.

இந்நிலையில் மேலும் விரைவாக படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 725 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் உள்ள பாரிய இராணுவ முகாமகள் அகறறப்பட மாட்டாது எனவும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் மக்களை மீள்குடியேற அனுமதிக்கப்படவுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவ்வாறு விடுவிக்கப்படும் பகுதிகளில் படிப்படியாக மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளார்கள் என அரச அதிபர் மேலும தெரிவித்தார். (செ-9)

## நெஞ்சார்ந்த நன்றிகள்...

கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை தமிழ் மக்கள் பேரவை ஏற்பாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்டு மிகவும் எழுச்சியுடன் நடைபெற்ற எழுக தமிழ் பேரணி தமிழர் வரலாற்றின் ஒரு பதிவாக அமைந்துள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் முற்றத்தில், மீண்டும் ஒருமுறை, அதுவும் 2009 இன அழிப்பின் பின் மக்கள் அலைகடல் என குவிந்தது ஒரு வரலாற்றுப் பதிவு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மேலும் வரலாற்றுப்புகழ் மிக்க யாழ்.கோட்டைச் சூழலில் மக்கள் வெள்ளம் கூடி தமிழரின் பிரகடனத்தை உரக்கக்கூறி வெளியிட வடக்கின் முதல்வரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் தமிழரின் நிலைப்பாட்டை மிகவும் கம்பீரமாகவும், தெளிவாகவும் கூறியதானது, தமிழர் நாம் எவ்வேளையிலும் எமது தியாகங்களை வீண் போகவிடப்போவதில்லை என்ற செய்தியையும், எமது உரிமைகளை விட்டுக் கொடுக்கத்தயார் இல்லை என்ற செய்தியையும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறிநிற்கின்றது.

இம்மாபெரும் எழுச்சிக்கு சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது அலைகடலென திரண்டு வந்த மக்களின் உணர்வுக்கு, தமிழ் மக்கள் பேரவை சிரம் தாழ்த்தி வணங்குகின்றது.

இப் போராட்டத்தில் மிகப்பெரும் பங்காற்றிய மதகுருமார்கள் அனைவரையும் முதற்கண் வணங்கி நிற்கின்றோம்.

மேலும் இப்பேரணிக்கு தமது முழு ஆதரவையும் வழங்கியது மட்டுமின்றி பல வழிகளிலும் உதவிகள் புரிந்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள், யாழ்.பலகலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரதும் எழுச்சிகண்டு இறும்பூதெய்கிறோம்.

நேரடியாக பல அழுத்தங்கள் வந்த வேளையிலும், தாமாக முன் வந்து தமது வர்த்தக நிலையங்களை முற்றாக மூடி எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்ட எம தருமை வர்த்தகப் பெருமக்களின் உணர்வுமிக்கசெயல் எங்கள் வரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகும்.

இதேபோல் தமது நாள் தொழிலை தியாகம் செய்து, தமது உணர்வுகளை வெளிக்காட்டி, பேரணியில் பங்குகொண்ட கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய நாள் தொழில் செய்பவர்களையும் மற்றும் பலவித உத்தியோகத்தர்கள், தனிநபர்கள், மகளிர் அமைப்புக்கள், கழகங்கள், பலவிதமான பொது அமைப்புக்கள் என அனைவரதும் எழுச்சி கண்டு தமிழ் மக்கள் பேரவை பெருமை அடைகின்றது. மேலும், இப்பேரணிக்கு பல இடர்கள் மத்தியிலும் போக்குவரத்து வசதிகள் மேற்கொண்ட போக்குவரத்துச் சங்கங்கள் அனைத்தினதும் இனப்பற்றை நன்றி உணர்வோடு தமிழ் மக்கள் பேரவை நோக்குகின்றது.

ஒரு சில ஊடகங்கள் குழப்பகரமான செய்திகளை வெளியிட்டு இப்பேரணியை குழப்பும் முழு முயற்சியில் இறங்கியபோதும் மக்கள் அவ் ஊடகங்களை இனங்கண்டு அப் பொய்ப்பிரச்சாரங்களையெல்லாம் புறக்கணித்து இவ் அகிம்சைப் போராட்டத்தில் அலைகடலென திரண்டெழுந்த எழுச்சியானது ஒரு தீர்க்கமான செய்தியை சொல்லி நிற்கின்றது.

அதேவேளை இப் பேரணியின் வெற்றிக்கு அயராது உழைத்த தேசியப் பற்றுள்ள ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் நாம் என்றும் தலைவணங்கி நிற்பதுடன் அவர்களின் தேசப்பற்று எமது எதிர்கால செயற்றிட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்குமிடமில்லை என்பதையும் பதிவாக்கிக்கொள்கின்றோம்.

இதேபோல், அரசியல் சுயலாபம் கருதிய ஒரு சில சக்திகள் பேரணியை குழப்புவதற்காக பல வழிகளிலும் முயன்றபோதும், அவற்றையெல்லாம் உதாசீனம் செய்து, தமது "எழுக தமிழ்" கோஷம வானதிர முழங்கிய எம் தமிழ் உள்ளங்களையும், அவர்களின் தேசப் பற்று மற்றும் தமிழ்பற்றையும் பார்க்கும்போது, எம் தேசத்தில் எத்தகைய இடர்கள் வரினும் இம் மண் ஒருபோதும் தியாகங்களை மறந்து அடங்கிப் போய் தமது உரிமைகளை கை விடாது என்ற செய்தியை மிகத் தெளிவாக சொல்லி நிற்கின்றது என தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் நன்றி பராட்டியுள்ளது. (செ)

## 1500 ஏக்கர்...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் இந்த வருட காலப்பகுதியில் ஜனவரி - பெப்ரவரி மாதமளவில் வலி வடக்கில் 700 ஏக்கரும் மே - யூன் மாதமளவில் 800 ஏக்கரும் விடுவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள் குடியேற்ற அமைச்சினால் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய வீடுகள், வாழ்வாதார உதவிகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீட்டுத்திட்டத்தின் அடிப்படையில் 3565 வீடுகள் ஒக்டோபர் மாதம் நிறைவுசெய்ய வேண்டியுள்ளது. இதுவரையில் 48 வீடுகள் முடிவடைந்துவிட்டன. 1423 வீடுகள் முடிவுறும் நிலையில் இருக்கின்றன. ஏனைய வீடுகள் அடுத்த வருட இறுதிக்குள் முடிவுறுத்தப்படும்.

நலன்புரி முகாம்களில் உள்ள மக்களில் காணிகளற்றவர்களுக்கு காணி மற்றும் வீடு வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக கீரிமலைப் பகுதியில் 133 வீடுகள் கட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் இராணுவத்தினரால் கட்டப்பட்டு வருகின்றது. இவ்வீடுகள் முடிவுறும் தருவாயில் இருப்பதனால் மிக விரைவில் அவ்வீடுகளும் கையளிக்கப்படவுள்ளன.

921 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் வசிக்கின்றார்கள். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் வீடுகள் அமைத்துக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## தமிழர்களை...

கிருலப்பனையில் அமைந்துள்ள பொது பல சேனா அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அதன் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர்.

தெற்கில் எந்தவொரு இடத்திலும் தமிழ் மக்களுக்கு வர்த்தகம் செய்ய முடியுமானால், பருத்தித் துறையிலிருந்து தெய்வேந்திர முனை வரை தமிழர்களுக்கு எந்த இடங்களிலும் சுதந்திரமாக செயற்பட முடியுமாக இருந்தால், மலையகத்தில் தமிழர்கள் கலாசாரத்தை பாதுகாத்து, விண்ணைத் தொடும் அளவிற்கு கோவில்களைக் கட்டிக் கொண்டு, அவர்கள் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழ முடியுமாக இருந்தால்ஏன் அப்படிப்பட்ட உரிமை சிங்கள மக்களுக்கு வடக்கில் மறுகப்படுகின்றது என்பதை வக்னேஸ்வரனிடம் நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

மறுபுறத்தில் பலவிதமான பிரிவினைவாதப் பேச்சுக்களை பேசுகின்ற வேளையில் ஆரம்பகாலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். சிங்கள மக்களுக்கு சண்டித்தனம் காட்டினால் தமிழர்கள் அனைவரும் பெட்டி படுக்கையுடன் தமிழ் நாட்டிற்குச் செல்ல தயாராக வேண்டும் என்பதை இங்கு கூறிவைக்க வேண்டும். இந்த நிலமையையா உருவாக்க விரும்புகின்றீர்கள் எனறு கேட்க விரும்புகின்றோம்.

சிங்கள மக்களின் பொறுமையின் இறுதி விளிம்பை தட்டிப்பார்க்கும் பரிசோதனையை செய்ய வேணடாம். ஆட்சியிலுள்ளவர்கள் இது தொடர்பில் மௌனம் காத்திருந்தாலும் இந்த நாட்டிற்கும், சிங்கள இனத்திற்கும் ஏற்படுத்தப்படுகின்ற அவமானத்தை பௌத்த சமூகத்தின இளைய தலைமுறையினர் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறான செயல்களை கண்டு ஏன் இனனும் மௌனமாக உள்ளீர்கள் என சிங்கள இளைஞர்கள் எங்களிடம் வினவுகின்றனர். ஆனாலும் நாங்கள் மௌனமாக இல்லை. குளமாக இருந்தாலும், கிணறாக இருந்தாலும் அது கலங்கியிருககும் போது அதன் ஆழம் தெரியாது. அதேபோல் தான் நாம் என்பதை நினைவில்கொளள வேண்டும் எனபதை கூறிவைக்க விரும்புகின்றோம் என ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ-9)

# இலங்கை...

இந்த சந் திப்பின் போது இரு நாடுகளினதும் கடற்படை யினருக்கு இடையிலான கூட்டுப் படை நட வடிக்கைகள், பயிற்சிகள் உள்ளிட்ட பல விட யங்கள் ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

சீனா தனது ஆதிக்கத்தை இந்து சமுத்திரத்தில் வலுப்படுத்திவரும் நிலையில் இடம் பெற்றுள்ள இந்த சந்திப்பின் போது இலங்கையை அண்மித்த இந்து சமுத்திரத்தில் சீனக் கடற்படையினரின் நடமாட்டம் குறித்தும் குறிப்பாக சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டம் தொடர்பிலும் ஆராயப்பட்டதாக இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(செ)

# ரூ.2,997 மில்...

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 10 திணைக்களங்களில் 2997.858 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டிலான 281 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இணைத்தலைவர்களான வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, இ.அங்கஜன் தலைமையில் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வருடத்தில் (2016) நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பான விபரங்களை யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதிக்காக சமர்ப்பித்திருந்தார்.

அந்தவகையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு 5.305 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 3 திட்டங்களும், நீர்ப்பாசனத்திணைக்களத்துக்கு 1.170 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டமும்,யாழ். மாவட்டச் செயலகத்துக்கு 205.575 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 9 திட்டங்களும், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்துக்கு 17.230 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 5 திட்டங்களும், மாவட்ட செயலக விவசாயப்பிரிவுக்கு 20.700 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 3 திட்டங்களும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 2059.000 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 12 திட்டங்களும், உள்ளூராட்சி திணைக்களத்துக்கு 109.345 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 82 திட்டங்களும், வடமராட்சி கல்வி வலயத்துக்கு 527.621 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 134 திட்டங்களும், உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு 37.550 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 25 திட்டங்களும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை, பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை, உள்ளூர் பாலம் அமைத்தல் திட்டத்துக்கு 14.362 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் 7 திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்குறித்த திட்டங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் அனைவரின் ஒப்புதலுடன் இணைத் தலைவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது. குறித்த வேலைத்திட்டங்கள் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (செ-9)

# மின்சாரம்...

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4.30)

# சந்தேக நபர்களை...

கடற்படை முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவ தைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக கருதப்படும் ஐந்து மாணவர்கள் உட்பட 11 தமிழ், முஸ்லிம் இளைஞர்களது கடத்தல் சம்பவம் தொடர்பி லான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் கோட்டை நீதவான லங்கா ஜயர த்ன முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ் முஸ்லிம் மாணவர்களது பெற்றோர்களால் தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணை கடந்த 8 வரு டங்களாக நடைபெற்று வருகின்ற போதிலும் சட்டமா அதிபர் திணைக களத்தின் சார்பில் எவரும் கலந்து கொள்ளாததால் தொடர்ந்தும் வழக்கு விசாரணை ஒத்திவைக் கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகிய சட்டமா அதிபர் திணைக் களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு சட்டத்தரணிகள், இந்த வழக்கின் முக்கிய சந்தேக நபர்களை அடையாளங்கண்டு மன்றில் ஊர்ஜிதப்படுத்துவதற்கும், முன்னிலை செய்வதற்கும் 3 மாத காலம் தேவைப்படுவதாக கோட்டை நீதவான லங்கா ஜயரத்னவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மன்றில் பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி அச்சலா எவ்வித ஆட்சேபனையை யும் தெரிவிக்கவில்லை.

இதற்கமைய சட்டமா அதிபர் திணைக் களத்தின் கோரிக் கையை ஏற்றுக் கொண்ட நீதவான் லங்கா ஜயரத்ன மூன்று மாத கால அவகாசத்தை வழங்கியதோடு எதிர் வரும் 2017ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதிக்கு வழக்கு மீதான அடுத்த விசாரணைகளை ஒத்தி வைத்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சட்டத்தரணி அச்சலா, இன்றைய தினம் (நேற்று) 11 பேரது கடத்தல் வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

ஏற்கனவே கூறியதற்கு அமைய சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் இரண்டு பிரதிநிதிகள் மன்றில் பிரசன்னமாகினார்கள்.

குற்றப் புலனாய்வு திணைக் களத்தினால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கை தொடர்பில் மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளவும், சந்தேக நபர்களைப் பெயரிடுவதற்கு ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்க மூன்று மாத காலம் தேவைப்படுகிறதாக மன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வழக்கு நீண்டகாலமாக இடம்பெற்றுள்ளதால் மேலும் தாமதிக்காமல் சரியான முறையில் சந்தேக நபர்களை விரைவில் அடையாளம் கண்டு மன்றில் அறிவிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கவனத்திற்கொண்ட நீதவான், குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் இருந்து மேலதிக விசா ரணை உதவிகளைப் பெறவும், சந்தேகநபர்களின் பெயர்களைக் குறிப்பிடவும் குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்க இணங்கியதாக கூறினார். (செ)

# அமெரிக்க-இந்திய...

எதிர் கொள்ள நேரிடும் . ஆகவே அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனான பொருளாதாரத்தை மையப்படுத்திய ஒப்பந்தங்களை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லை , நெலும் மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்று கையில்,

இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் எதிர்பார்ப்புடன் அரசாங்கம் செயற்படுகின்றது. பொருட்கள் கொள்வனவில் மாத்திரம் இதுவரைக் காலமும் இருந்த இந்தியா தற்போது சேவை துறையை நோக்கி வியாபிக்கின்றது.

இதனால் உள்ளூர் பொறியியல் உள்ளிட்ட பல துறைகளின் தரம் கேள்விக்குறி யாவதுடன் இலங்கையர்களுக்கு தொழிலின்மையும் ஏற்பட போகின்றது. 30 ஆயிரம் பட்டதாரிகள் இதுவரையில் நாட்டில் உள்ளனர். எட்கா ஒப்பந்தம் ஊடாக இலங்கை இந்தியாவின பொருளாதார பிராந்தியமாகும் நிலையே காணப்படுகின்றது. இதற்கு முன்னர் இந்தியாவுடன் செய்துக் கொள்ளப்பட்ட சுதந்திர பொருளாதார ஒப்பந்தங்களில் இலங்கை பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தினால் எவ்விதமான நன்மையும் இலங்கைக்கு கிடையாது. மாறாக இந்தியா முழு அளவில் பலனை அடைகின்றது.

உள்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தியாவின் அவசர சிகிச்சை சேவை தென் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன? இரகசிய தகவல்களை திருடும் பொருட்டே இவ்வாறான சேவைகளை இலங்கையில் அறிமுகம் செய்கின்றனர். இவ்வாறான தொரு நிலையில் மற்றுமொரு ஆபத்தான ஒப்பந்தத்தை செய்துக் கொள்வதன ஊடாக நிலைமை மோசமடையும்.

மேலும் உள் நாட்டு இறைவரி திணைக் களத்தின் வரி சேகரிப்பு பிரிவை அமெரிக்காவின் மெகன்ஸி என்ற நிறுவனத்திற்கு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது மிகவும் ஆபத்தான விடயமாகும். உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் அரச இரகசியங்கள வெளிநாடுகளுக்கு தெரிய கூடிய நிலையே இதில் காணப்படுகின்றது. இதனால் தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

# தமிழ் அரசியல்...

உண்ணா விரதப் போராட்டத்தை மேற் கொண்டிருந்தனர்.

சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்காக மன்னார் பிரஜைகள் குழுவின் இணைப்பாளர் அந்தோனி சகாயம் தலைமையில் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை மா.சக்திவேல், குறித்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுந்தரம் மகேந்திரன் ஆகியோர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு (நேற்றைய தினம்) சென்று அரசியல் கைதிகளை பார்வையிட்டனர்.

இதன் போது மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் போதே அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரதப்போராட்டத்தை கைவிட்டுள்ளனர்

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் கருத்து தெரிவிக்கையில்,

அனுராதபுரம் சிறைச்சாலையிலே உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்கும் முகமாக இன்று (நேற்று) அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தோம்.

இதன் போது அரசியல் கைதிகளை சந்தித்த போது அவர்கள் தமது விடுதலை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகளை எங்களிடம் தெரிவித்தனர்.

வினைத்திறனான வழக்கு செயன்முறை தங்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதிமன்றங்களுக்கு இடையே பாகுபாடு காண்பிக்கப்படுகிறது போன்ற குறைபாடுகளை கூறியிருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் ஊடாக முதலமைச்சருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தி ஒன்றையும் தெரிவித்துள்ளனர்.

நான் அனுராதபுரச் சிறைச்சாலைக்கு சென்ற சமயம் முதலமைச்சரின் செய்தி முதலமைச்சரினால் தொலைபேசியூடாக எனக்கு கிடைக்கப்பெற்றது.

அதாவது அரசியல் கைதிகளின் பிரச்சினைகள் குறித்து முதலமைச்சர் அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்தார்.

முதலமைச்சர் அரசியல் கைதிகளின் துரித விடுதலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அவசர நடவடிக்கை குறித்து அரசியல் கைதிகளிடம் தெரிவித்த போது 7 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் முதலமைச்சர் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்து குறித்த அரசியல்கைதிகள் தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக தெரிவித்தார்கள்.

அதற்கமைவாக அங்கு சென்ற நாங்கள் அவர்களுக்கு குளிர் பானங்களை வழங்கி அவர்களின் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நிறுத்தியுள்ளோம்.

அரசியல் கைதிகள் பல்வேறு வகையில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தாலும், இவர்களின் விடுதலை தொடர்பில் பல பிரச்சனைகள் இங்கு காணப்படுகின்றமையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

எனவே இங்கு பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதை அரசியல் கைதிகள் எங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே சிறந்ததொரு வினைத்திறனான ஒரு வழக்கு பொறிமுறையினை உருவாக்கி நீதிமன்றங்கள் அவற்றை கையாண்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வேண்டியது தற்காலிக தேவையாக இருந்தாலும், எல்லாவற்றிற்கும் மேலதிகமாக இந்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனை அற்ற முறையில் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# நீதியமைச்சர்...

இந்த மனுவானது மேன்முறையீட்டு நீதிபதிகளான விஜித் மலால்கொட மற்றும் பிரீத்திபத்மன் சுரசேன முன்னிலையில் பரிசீலிக்கபட்ட பின்னர் குறித்த 14 பேரையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ)


நீங்கள் தொழில் தேடுபவரா?
முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில்
Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்
O/L உடன் Diploma in Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY
SCHOOL of HOSPITALITY
இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

Mobile Phone Repairing Course

SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சியளிக்கப்படும்
7th Batch start on 01.10.2016
Weekdays / Weekend Batches
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்,
தனிப்பட்ட கவனிப்பு,
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7336000

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

தகவல்
புங்குடுதீவு உலக மையத்தின் அனுசரணையில் புங்குடுதீவில் நடாத்தப்படும் உலக மைய கல்வி நிலையத்துக்கு ஆங்கிலபாட ஆசிரியரும், விஞ்ஞானபாட ஆசிரியரும், கணித பாட ஆசிரியரும் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு:-
திரு.பரமேஸ்வரன் 0777293097

V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
• வெளிநாட்டு விசா (UK, கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ்) விண்ணப்ப படிவம் (Online form) நிரப்புதல்.
• இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

நீங்கள் ஓர் இசைக் கலைஞனாக மிளிர வேண்டுமா? மிக விரைவில் மல்லாகம் நீதிமன்றத்திற்கு அருகில் ஓகன், கிற்றார், ட்றம்ஸ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது.
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
0770771142, 0770229400


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.